விலை: 50.00
பக்கங்கள் : 16
website : www.valampurii.lk
viber : 076 636 3378
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com
சங்கு 25
ஒலி 137 வள்ளுவர் ஆண்டு 2055 சித்திரை 21 சனிக்கிழமை (04.05.2024) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829




## கிராம உத்தியோகத்தர்கள் இரு நாட்கள் சுகவீன விடுமுறைப் போராட்டம்

(கொழும்பு)

இருநாள் சுகவீன விடுமுறையை அறிவித்து கிராம உத்தியோகத்தர்கள் போராட்டத்தில் ஈடுபடவுள்ளனர்.

வேதனப் பற்றாக்குறை உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்து அவர்கள் போராட்டத்தில் ஈடுபடவுள்ளதாக அகில 15

## அரசுக்கு எதிர்ப்புத் தெரிவித்து மாணவர்கள் போராட்டம்

### பொலிஸார் நீர்த்தாரைப் பிரயோகம்



(கொழும்பு)

அரசாங்கத்துக்கு எதிர்ப்புத் தெரிவித்து மருத்துவ பீட மாணவர்கள் குழுவினால் கொழும்பில் நேற்று முன்னெடுக்கப்பட்ட எதிர்ப்பு நடவடிக்கையின்போது பொலிஸார் நீர்த்தாரைப் பிரயோகம் மேற் 15

# நாட்டில் பரவும் புதிய வைரஸ்

### குழுவாக கூடுவதைத் தவிர்ப்பதோடு முகக் கவசம் அணியுமாறு பணிப்பு

(கொழும்பு)

நாடு முழுவதும் வேகமாகப் பரவி வரும் காய்ச்சல் ஒரு வைரஸ் என்பதால் மக்கள் குழுவாக கூடுவதைத் தவிர்க்குமாறு கோரப்பட்டுள்ளது.

குழுவாக இருக்கும் இடங்களில் முகக் கவசங்களை அணிந்து கொள்ளுமாறு அநுராதபுரம் போதனா வைத்தியசாலையின் வெளி நோயாளர் பிரிவின் பிரதம வைத்திய அதிகாரி ஹேமா வீரகோன் கேட்டுக் கொண்டுள்ளார்.

(15ஆம் பக்கம் பார்க்க)

## கொத்து, ப்ரைட் ரைஸ் விலைகள் குறைப்பு

### பால் தேநீர், தேநீர் விலைகளில் மாற்றமில்லை

(கொழும்பு)

கொத்து ரொட்டி மற்றும் ப்ரைட் ரைஸ் என்பனவற்றின் விலை 20 ரூபாயினால் குறைக்கப்படவுள்ளது.

அகில இலங்கை சிற்றுண்டிச்சாலை உரிமையாளர்கள் சங்கம் இந்த அறிவிப்பினை வெளியிட்டுள்ளது.

நாட்டில் சமையல் எரிவாயு விலை குறைப்பிற்கு ஏற்ற வகையில் 15

## காதலி வீட்டிலிருந்து காதலன் சடலம் மீட்பு

### சுன்னாகம் பொலிஸ் பிரிவில் சம்பவம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தில் காதலியின் வீட்டில் இருந்து காதலனின் சடலம் மீட்கப்பட்டுள்ளது.

சுன்னாகம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் உள்ள பெண்ணொருவரின் வீட்டில் இருந்து ஆணின் சடலம் மீட்கப்பட்டுள்ளது.

விசாரணையில் சடலமாக மீட்கப்பட்ட ஆண் , அந்த வீட்டில் வசிக்கும் பெண்ணுடன் காதல 15




## இலங்கையில் ஊடகவியலாளர்கள் இராணுவத்தினரின் கண்காணிப்புக்குள்

### எல்லைகளற்ற செய்தியாளர்கள் அமைப்பு

(கொழும்பு)

இலங்கையில் ஊடகவியலாளர்கள் இன்னமும் இராணுவத்தினர் மற்றும் பொலிஸாரால் திட்டமிட்ட முறையில் கண்காணிக்கப்படுகின்றார்கள் என்று எல்லைகள் அற்ற செய்தியாளர்கள் அமைப்பு தெரிவித்துள்ளது.

சர்வதேச ஊடக சுதந்திர தினமான நேற்று 2024ஆம் ஆண்டுக்கான ஊடக சுதந்திரக் குறிகாட்டியை வெளியிட்டுள்ள எல்லைகள் அற்ற செய்தியாளர்கள் அமைப்பு, இலங்கையை 150ஆவது இடத்தில் பட்டியலிட்டு மேற்கண்ட 15

## லாஃப் எரிவாயு விலையும் குறைப்பு

(கொழும்பு)

லாஃப் சமையல் எரிவாயு விலையும் குறைக்கப்பட்டுள்ளது.

இதன்படி, 12.5 கிலோ கிராம் சமையல் எரிவாயு சிலிண்டரின் விலை 275 ரூபாயினால் குறைக் 15

## முழங்காவில் கடற்படை முகாமில் விபரீத முடிவெடுத்த கடற்படை சிப்பாய் மரணம்

(முல்லைத்தீவு)

முழுங்காவில் கடற்படை முகாமில் விபரீத முடிவெடுத்த கடற்படைச் சிப்பாய் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

இச்சம்பவம் நேற்று இடம்பெற்றுள்ளது.

மைத்திரிகம சிரிபுர பகுதியைச் சேர்ந்த தனுஸ் கயான் பிரேமரத்ன என்பவரே உயிரிழந்தவராவார்.

பாதுகாப்பு அறையில் வைக்கப்பட்டிருந்த துப்பாக்கியை எடுத்து 15

## மைத்திரியிடம் 2 மணி நேரம் வாக்குமூலம்

(கொழும்பு)

முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தில் இரண்டு மணிநேர வாக்குமூலம் வழங்கியுள்ளார்.

ஏப்ரல் 21 பயங்கரவாதத் தாக்குதல் 15

## ஆவரங்காலில் வீட்டின் மீது பெற்றோல் குண்டுத் தாக்குதல்

(யாழ்ப்பாணம்)

ஆவரங்கால் கிழக்குப் பகுதியில் உள்ள வீடொன்றின் மீது பெற்றோல் குண்டு மற்றும் கல்வீச்சுத் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

குறித்த தாக்குதல் சம்பவத்தால், வீட்டிற்கு பெரியளவிலான சேதங்கள் எதுவும், ஏற்படவில்லை.

சம்பவம் தொடர்பில் அச்சுவேலிப் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ள நிலையில் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

இதேவேளை நேற்று முன்தினம் 15



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## வீடு விற்பனைக்கு

சுண்டிக்குளி, பாண்டியன்தாழ்வு வீதியில் 3 1/2 பரப்பு காணியில் சகல வசதிகளுடன் கூடிய வீடு விற்பனைக்கு உண்டு.

தொடர்புகளுக்கு:

070 382 4074

(640)


# இலங்கைக்கான நோர்வே தூதுவர் அநுரவுடன் விசேட சந்திப்பு

(கொழும்பு)

இலங்கைக்கான நோர்வே தூதுவருக்கும் தேசிய மக்கள் சக்தியின் தலைவர் அநுரகுமார திசாநாயக்கவிற்கும் இடையில் கலந்துரையாடல் ஒன்று இடம்பெற்றுள்ளது.

நோர்வே தூதுவர் மே-எலின் ஸ்டெனர் மற்றும் அநுரகுமார திசாநாயக்க ஆகியோருக்கிடையிலான சந்திப்பு மக்கள் விடுதலை முன்னணியின் காரியாலயத்தில் நேற்று முன்தினம் பிற்பகல் இடம் பெற்றது.

சந்திப்பின் நோர்வே தூதரகத்தின் இரண்டாவது செயலாளரான ஜோன் பிஜேர்கெம், தேசிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் ஹரினி அமரசூரிய மற்றும் பாராளுமன்ற உறுப்பினர் விஜித ஹேரத் ஆகியோர் கலந்து கொண்டனர்.

இதன்போது, நாட்டில் தற்போது நிலவும் பொருளாதார நெருக்கடி தொடர்பாகவும் அரசியல் ரீதியிலான பிரச்சினைகள் தொடர்பாகவும் கலந்துரையாடப்பட்டது.



நோர்வே அரசாங்கத்தினால் இலங்கைக்கு வழங்கப்படவுள்ள உதவிகள் மற்றும் இரு நாடுகளுக்கிடையிலான உறவை வலுப்படுத்துவதன் அவசியம் தொடர்பிலும் கலந்துரையாடப்பட்டது.

(ம-7,10)


## கட்டடப் பொருட்கள் விநியோகம்

1.மணல் வகை - கட்டு மணல், பூச்சு மணல் (கண்டாவளை பெருக்கன் நைஸ்)
2.சல்லி வகை - கருங்கல் சல்லி, வெள்ளை சல்லி
3.கண்டல் வகை - 9" X 6" கருங்கல் , 9" X 6" வெள்ளைக்கல்(காட்டுக்கல்)
4.டஸ்ட் - கருங்கல் டஸ்ட், வெள்ளைக் கல் டஸ்ட்
5.கலவன் டஸ்ட்
6.தளம் மற்றும் நில பதிவுக் கல்
7.கூரை ஓடு வகைகள்

கொங்கிறீற் கல், கொங்கிறீற் வேலி, தூண் ஆகியவை நியாய விலையில் பெற்றுக்கொள்ளலாம். கட்டட வேலைகளும் செய்துதரப்படும்.

தொடர்புகளுக்கு : 077 666 7684 / 076 096 4460

(641)


# வீதியில் தீப்பற்றிய முச்சக்கரவண்டி



(நுவரெலியா )

நுவரெலியா - ஹட்டன் பிரதான வீதியில் நானுஓயா பிரதான தபால் நிலையத்திற்கு முன்பாக முச்சக்கரவண்டி ஒன்று திடீரென தீப்பற்றி எரிந்துள்ளது.

இச்சம்பவம் நேற்று மதியம் இடம்பெற்றுள்ளது.


நோட்டன் பிரிட்ஜ் பகுதியில் இருந்து நுவரெலியா நோக்கி பயணம் மேற்கொண்ட போதே முச்சக்கரவண்டி தீ பிடித்து எரிந்துள்ளது.

முச்சக்கரவண்டியினை வீதியோரத்தில் நிறுத்தி விட்டு அருகில் உள்ள வர்த்தக நிலையத்திற்கு சென்று உணவு பொருட்கள் கொள்வனவு செய்து கொண்டு வந்து மீண்டும் முச்சக்கரவண்டியினை இயக்க முற்பட்ட போது திடீரென தீ பரவல் ஏற்பட்டுள்ளது.

(ம-7,10)

## மரண அறிவித்தல்

மலர்வு 28 - 07 - 1949



உதிர்வு 30 - 04 - 2024

### அந்தோனிப்பிள்ளை பீற்றர்குமார்

(பழைய மாணவர் யாழ் புனித பத்திரிசியார் கல்லூரி, ஓய்வுநிலை இறைவரிப் பரிசோதகர் - யாழ் மாநகர சபை, முன்னாள் பொருளாளர் மேய்ப்புப் பணிச்சபை யாழ் மரியன்னை பேராலயம், புனித கார்மேல் அன்னை ஆலயம், உலக தரிசனம் புனித யாகப்பர் ஆலயம் குருநகர், கடல்தொழில் குத்தகையாளர் சங்கம், பொருளாளர் கடல் உணவு ஏற்றுமதியாளர் சங்கம், முன்னாள் தலைவர் குருநகர் முன்னேற்ற ஐக்கிய முன்னணி, பழைய மாணவர் சங்க கல்விக் கழகம் பிரான்ஸ், புனித யுத் கார்மேல் விளையாட்டுக் கழகம், பலநோக்கு கூட்டுறவுச் சங்கம் கிளை இல.31)

யாழ்ப்பாணம் மவுண்கார்மேல் வீதியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட அந்தோனிப்பிள்ளை பீற்றர்குமார் அவர்கள் 30.04.2024 செவ்வாய்க்கிழமை அன்று இறைவனடி சேர்ந்து விட்டார்.

அன்னார் இறைபதமடைந்த சுவக்கின் அந்தோனிப்பிள்ளை சிங்கம் - அன்னம்மா மரியப்பிள்ளை தம்பதியினரின் அன்பு மகனும் இறைபதமடைந்த சந்தியோ அந்தோனிப்பிள்ளை - அன்னம்மா தம்பதியினரின் அன்பு மருமகனும் இறைபதமடைந்த ஞானப்பிரகாசம் செல்வத்தின் பெறாமகனும் இருதயநாயகி(லில்லி - ஓய்வுநிலை நிர்வாக உத்தியோகத்தர் கமநல சேவைகள் திணைக்களம், யாழ்ப்பாணம்) அவர்களின் அன்புக் கணவரும் நிலுஷாவின்(மாணவி - யாழ்.திருக்குடும்ப கன்னியர்மடம் தேசிய பாடசாலை) அருமைத் தந்தையும் கிறேசியன்துரை (பழைய மாணவன் புனித பத்திரிசியார் கல்லூரி, உதைபந்தாட்ட வீரர், மின்சார சபை, யாழ். மாநகர சபை)(பிரான்ஸ்), கிளாறம்மா சூரியமலர்(பிரான்ஸ்), சகாயமலர்(பிரான்ஸ்), டக்ளஸ் ஆஞ்சலோ (பழைய மாணவன் புனித பத்திரிசியார் கல்லூரி)(பிரான்ஸ்) ஆகியோரின் அன்புச் சகோதரனும் லூர்த்துநாயகி(பிரான்ஸ்), ச.அ.ஜெறோம் (ஓய்வுநிலை பிரதேச செயலாளர் பாண்டியன்குளம் நெடுங்கேணி(பிரான்ஸ்), அ.யோசவ் (ஓய்வுநிலை நில அளவையாளர்(பிரான்ஸ்), டெய்சி (பிரான்ஸ்) மற்றும் இறைபதம் அடைந்தவர்களான பிரான்சிஸ்கா யோசப்(ஓய்வுநிலை ஆசிரியர்), ச.அ.ஸ்ரீபன்(ஓய்வு நிலை களஞ்சியக் காப்பாளர் வ.பி.போ.சபை), ச.அ.எட்வேட்ஸ்(ஓய்வுநிலை அத்தியட்சகர் வ.பி.போ.சபை), அருட்சகோதரி மேரிலூயிஸ் அந்தோனிப்பிள்ளை (ஓய்வுநிலை ஆசிரியர் - திருக்குடும்பசபை) மற்றும் ச.அ.ஸ்ரனிஸ்லாஸ் (பபா), ச.அ.சென் ஜேம்ஸ்(ஓய்வு நிலை கணித ஆசிரியர்)(கனடா) ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்கம் 2024.05.04 ஆம் திகதி சனிக்கிழமை பி.ப 2.30 மணியளவில் யாழ். மவுண்கார்வேல் வீதியில் உள்ள அவரது இல்லத்தில் இருந்து எடுத்துச் செல்லப்பட்டு புனித கார்மேல் அன்னை ஆலயத்தில் நடைபெறும் இரங்கல் நிகழ்ச்சியின் பின், புனித மரியன்னை பேராலயத்தில் இரங்கல் திருப்பலி நடைபெற்று பரிசுத்த கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள், அன்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.


"தாயகம்",
42/5, மவுண்கார்மேல் வீதி,
யாழ்ப்பாணம்.

தொ.இல:
021 222 2156
077 112 4531

தகவல்:
குடும்பத்தினர்

(644)

## மரண அறிவித்தல்



### விநாயகமூர்த்தி பராசக்தி

கொக்குவில் மேற்கு சிவகுரு லேனைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட விநாயகமூர்த்தி பராசக்தி அவர்கள் 03.05.2024 நேற்று வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற இராசையா - செல்லம்மா தம்பதியினரின் சிரேஷ்ட புதல்வியும் காலஞ்சென்ற கந்தையா - மனோன்மணி தம்பதியினரின் பாசமிகு மருமகளும் காலஞ்சென்ற விநாயகமூர்த்தியின் அன்பு மனைவியும் ஞானாம்பிகை, காலஞ்சென்ற கலைவாணி மற்றும் ஞானசூரியன் (லண்டன்), ஞானசம்பந்தன்(சுவிஸ்), ஞானசொரூபன், காலஞ்சென்ற ஞானேஸ்வரன் மற்றும் ஞானகுமார்(சுவிஸ்), ஞானேந்திரன்(உரிமையாளர் - யாழ்ரன் மல்ரி சென்ரர்), ஞானகலை(கனடா), ஞானேஸ்வரி(அமெரிக்கா) ஆகியோரின் பாசமிகு தாயாரும் யோகராஜா, விமலாதேவி, ருசானி, சிவரேகா, ஜெயறமணி, துரைசிங்கம், பாஸ்கரன் ஆகியோரின் பாசமிகு மாமியாரும் நிசானி, சமந்தா, நிலானி, றக்ஷன், நிக்ஷன், மினோஜா, மகனிஹா, விதுஷன், லஷ்மி ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் காலஞ்சென்ற S.R.அன்னலிங்கம் மற்றும் தவமணி காலஞ்சென்றவர்களான S.R.மகாலிங்கம், மனோன்மணி ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விபரம் பின்னர் அறிவிக்கப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

சிவகுருலேன்,
கொக்குவில் மேற்கு,
கொக்குவில்.

(645)

தகவல்:
குடும்பத்தினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பேராசிரியர் சு.வித்தியானந்தன் நூற்றாண்டு விழா

யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி

மே,11,12.2024.

(சி-0265)


# மருந்துப் பொருட்களுக்கு தட்டுப்பாடு சிரமத்திற்கு உள்ளாகும் நோயாளிகள்

## அரச மருந்தாளர் சங்கம்

(கொழும்பு)

**நாட்டின் அரச மருத்துவமனைகளில் கடுமையாக மருந்துப் பொருட்களுக்கு தட்டுப்பாடு நிலவி வருவதாக தெரிவிக்கப்படுகின்றது.**

இதேவேளை சுமார் 20 முதல் 30 வீதமான அளவில் மருந்துப் பொருட்களுக்கு தட்டுப்பாடு நிலவி வருவதாக அரசாங்க மருந்தாளர் சங்கத்தின் தலைவர் துசார ரணதேவ தெரிவித்துள்ளார்.

அத்தியாவசிய மருந்துப் பொருட்களுக்கு நிலவி வரும் தட்டுப்பாடு காரணமாக நாடு முழுவதிலும் நோயாளிகள் பெரும் சிரமங்களை எதிர்நோக்க நேரிட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

குறிப்பாக கொழும்பு தேசிய மருத்துவமனையில் பாரியளவில் மருந்துப் பொருட்களுக்கு தட்டுப்பாட்டு நிலை நீடித்து வருவதாக சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

பொருளாதார ரீதியில் நலிவடைந்த மக்கள் தனியார் மருந்தகங்களில் மருந்து கொள்வனவு செய்ய முடியாது சிரமங்களை எதிர்நோக்கி வருவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

முன்னாள் சுகாதார அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல்லவின் அமைச்சுக் காலத்தில் இடம்பெற்ற முறை கேடுகளினால் இவ்வாறு மருந்துப் பொருட்களுக்கு தட்டுப்பாடு நிலை ஏற்பட்டதாக அரசாங்க மருந்தாளர் சங்கத்தின் தலைவர் துசார ரணவே தெரிவித்தார். (6)

# ஜனாதிபதியுடன் இணையும் எண்ணம் எமக்கு இல்லை

## ஐக்கிய மக்கள் சக்தி

(கொழும்பு)

எந்தவொரு ஒப்பந்தத்தின் அடிப்படையிலும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுடன் இணைந்து செயற்பட போவதில்லை என ஐக்கிய மக்கள் சக்தி தெரிவித்துள்ளது.

கொழும்பில் நேற்று முன் தினம் இடம் பெற்ற ஊடக சந்திப்பில் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் சுஜீவ சேனசிங்க இதனைத் தெரிவித்துள்ளார். இவ்விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

ஒப்பந்தத்தின் அடிப்படையில் இணையு மாறு ஜனாதி பதி கோரினாலும் எமக்கு இணையும் எண்ணம் இல்லை.


ஜனாதிபதி இந்த நாட்டை மாத்திரமல்ல கட்சியையும் வீணடித்தவர். ஜனாதிபதியுடன் எந்தவொரு இணக்கப்பாட்டினையும் ஏற்படுத்த நாம் விரும்பவில்லை.

மஹிந்த ராஜபக்ஷ, கோட் டாபய ராஜபக்ஷ, சந்திரிக்கா குமாரதுங்க, மைத்திரிபால சிறிசேன போன்றவர்களின் ஆட்சி அமைவதற்கு ரணில் விக்கிரமசிங்கவும் ஒரு காரணியாக அமைந்தார்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தனது பதவியை தக்கவைத்துக் கொள்வதற்காவே தற்போது முயற்சிக்கின்றார். அவர் ராஜபக்ஷ தரப்பை பாதுகாப்பவராகவே செயற்படுகின்றார்.

அவ்வாறான ஒருவருடன் நாம் எந்தவித இணக்கப்பாட்டையும் ஏற்படுத்த விரும்ப வில்லை என முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் சுஜீவ சேனசிங்க மேலும் தெரிவித்தார். (6)

# இலங்கையை வந்தடைந்த சொகுசு பயணிகள் கப்பல்



(கொழும்பு)

இன்சிக்னியா என்ற சொகுசு பயணிகள் கப்பல் இலங்கைக்கு வந்துள்ளது.

தாய்லாந்தில் இருந்து 657 சுற்றுலாப் பயணிகளுடனும் 454 பணிக் குழாமினருடனும் நேற்று முன்தினம் அதிகாலை குறித்த கப்பல் கொழும்புத் துறை முகத்தை வந்தடைந்துள்ளது.

ரஷ்யா, அமெரிக்கா மற்றும் ஜப்பான் ஆகிய நாடுகளைச் சேர்ந்த சுற்றுலாப் பயணிகளே குறித்த கப்ப லில் வருகை தந்துள்ளனர்.

அவர்கள் கொழும்பு மற்றும் காலி ஆகிய இட ங்களில் சுற்றுலா வில் ஈடுபடவுள்ளனர். (6)

# வருடாந்தம் சுமார் 2.5 பில்லியன் டொலர்கள் கடனாக செலுத்தப்படுகிறது

## நிதி இராஜாங்க அமைச்சர்

(கொழும்பு)


வருடாந்தம் சுமார் 2.5 பில்லியன் டொலர்கள் வெளி நாட்டு கடனாக செலுத்தப்படு வதாக நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய தெரிவித்துள்ளார்.

வெளிநாட்டுக் கடன் செலு த்துதல் உத்தியோகபூர்வமாக இடைநிறுத்தப்பட்டுள்ள போதி லும், இந்தத் தொகை கடனாக செலுத்தப்படுவதாக குறிப்பிட்டுள்ளார். இருப்பினும், இருதரப்பு வெளிநாட்டு கடன் கொடு ப்பனவுகள் மாத்திரம் இடைநிறுத்தப்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார். கடன் கொடுப்பனவு இடைநிறுத்த ப்படுவதற்கு முன்னர், அவர்கள் வரு டாந்தம் சுமார் 5 பில்லியன் டொலர்களை செலுத்தி வருவதாகவும் அமைச்சர் கூறியுள்ளார்.

மேலும், 2022 ஆம் ஆண்டில் 2.5 பில்லியன் டொலர்களும், 2023 ஆம் ஆண்டில் 2.6 பில்லியன் டொலர்களும் வெளிநாட்டுக் கடனாக செலுத்தப்பட்டுள்ளதாகவும் அமைச்சர் தெரிவித்துள்ளார். (6)


# மரண அறிவித்தல்

பிறப்பு 10 - 05 - 1925



இறப்பு 01 - 05 - 2024

அமரர். **இராசரட்ணம் பவளம்மா (பவளம்)**

குப்பிளானைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட இராசரட்ணம் பவளம்மா (பவளம்) 01.05.2024 கடந்த புதன்கிழமை இறைவனடி எய்தினார்.

அன்னார் காலஞ்சென்ற இராசிங்கன்- சின்னம்மா தம்பதிகளின் அன்பு புத்திரியும், காலஞ்சென்ற முருகேசர்- சின்னம்மா தம்பதிகளின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற இராசரட்ணத்தின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான ஆச்சியம்மா, சின்னம்மா, குஞ்சுப்பிள்ளை, நடராசா மற்றும் தேவியம்மா ஆகியோரின் சகோதரியும் கௌரிதேவி, பாக்கியநாதன்(லண்டன்), சந்திராதேவி(டென்மார்க்) ஆகியோரின் அன்புத் தாயாரும் லோகநாதன், சிவஞானவதி(லண்டன்), நாகரத்தினம்(டென்மார்க்) ஆகியோரின் அன்பு மாமியாரும், தர்சன், தர்சிகா(லண்டன்), சங்கீதா(லண்டன்), சத்தியா(லண்டன்), விதுசன் (டென்மார்க்), ஆரணி(டென்மார்க்) ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், நவ்வியா, காசிக், மகிழினி, சேயோன், கஸ்மிகா, அஸ்விக், அச்சரன் ஆகியோரின் பூட்டியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 05.05.2024 நாளை ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று தகனக்கிரியைக்காக பூதவுடல் கடாகரைம்பை இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

(சி-0268)

குப்பிளான் தெற்கு, குப்பிளான். தகவல்- குடும்பத்தினர். 077 1167 815


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஸ்ரார்க் வேகம் ; மும்பை சோகம்

## பிளே ஓப் வாய்ப்பை நெருங்குகிறது கொல்கத்தா



**50 விக்கெட்டுக்கள்**

கொல்கத்தாவின் ஸ்ரார்க்கை வெளியேற்றிய மும்பை வேகப்பந்து வீச்சாளர் பும்ரா, வான்கடே மைதானத்தில் தனது 50ஆவது விக்கெட்டை பதிவு செய்தார். இதுவரை இங்கு 51 விக்கெட்டுக்களைச் சாய்த்துள்ளார்.ஓட்டங்கள் எடுத்து ஏமாற்றினார்.

ஸ்ரார்க், ரசல், நரைன் உள்ளிட்ட பந்துவீச்சாளர்கள் கைகொடுக்க கொல்கத்தா அணி 24 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது. சொந்த மண்ணில் மும்பை அணி ஏமாற்றியது.

மும்பை, வான்கடே மைதானத்தில் நேற்று நடந்த ஐ.பி.எல்., லீக் போட்டியில் மும்பை - கொல்கத்தா அணிகள் மோதின.

நாணயச்சுழற்சியில் வென்ற மும்பை அணித் தலைவர் ஹர்திக் பாண்ட்யா களத்தடுப்பை தேர்வு செய்தார்.

**வெங்கடேஷ் அரைச்சதம்**

கொல்கத்தா அணிக்கு நுவன் துஷாரா தொல்லை கொடுத்தார். இவரது "வேகத்தில்" பில் சால்ட் (5), ரகுவன்ஷி (13), அணித் தலைவர் ஸ்ரேயாஸ் (6) வெளியேறினர். சுனில் நரைன் (8), ரிங்கு சிங் (9) சோபிக்கவில்லை. பின் இணைந்த வெங்கடேஷ், மணிஷ் பாண்டே ஜோடி கைகொடுத்தது. அபாரமாக ஆடிய வெங்கடேஷ், 36 பந்துகளில் அரைச்சதம் எட்டினார். ஆறாவது விக்கெட்டுக்காக 83 ஓட்டங்கள் சேர்த்த போது ஹர்திக் பந்தில் மணிஷ் (42) ஆட்டமிழந்தார். ரசல் (7) "ரன்-அவுட்" ஆனார். பும்ரா "வேகத்தில்" ராமன்தீப் சிங் (2), ஸ்ரார்க் (0), வெங்கடேஷ் (70) வெளியேறினர்.

19.5 ஓவர்களில் கொல்கத்தா அணி 169 ஓட்டங்களுக்கு சகல விக்கெட்டுக்களையும் இழந்தது.

மும்பை சார்பில் துஷாரா, பும்ரா தலா 3 விக்கெட் சாய்த்தனர்.

**சூர்யகுமார் ஆறுதல்**

எட்டக்கூடிய இலக்கை விரட்டிய மும்பை அணிக்கு இஷான் கிஷான் (13), நமன் திர் (11) ஏமாற்றினர். "இம்பாக்ட்" மாற்று வீரராக வந்த ரோகித் சர்மா (11) நிலைக்கவில்லை. திலக் வர்மா (4), நேஹல் வதேரா (6), அணித் தலைவர் ஹர்திக் (1) சொற்ப ஓட்டத்தில் ஆட்டமிழந்தனர். வைபவ் அரோரா வீசிய 14வது ஓவரில் ஒரு சிக்சர், ஒரு பவுண்டரி அடித்த சூர்யகுமார் யாதவ் 30 பந்துகளில் அரைச்சதம் எட்டினார். தனிநபராக போராடிய இவர் 56 ஓட்டங் களில் ஆட்டமிழந்தார்.

சிறிது நேரம் தாக்குப்பிடித்த டிம் டேவிட் (24), ஸ்ரார்க் பந்தில் சரணடைந்தார். தொடர்ந்து மிரட்டிய ஸ்டார்க் "வேகத்தில்" கோயட்சீ (8), பியுஸ் சாவ்லா (0) வெளியேறினர்.

மும்பை அணி 18.5 ஓவர்களில் 145 ஓட்டங்களுக்கு சுருண்டு தோல்வியடைந்தது. பும்ரா (1) அவுட்டாகாமல் இருந்தார். கொல்கத்தா சார்பில் ஸ்ரார்க் 4, ரசல், நரைன், வருண் சக்கரவர்த்தி தலா 2 விக்கெட் கைப்பற்றினர். ஆட்ட நாயகன் விருதை கொல்கத்தாவின் வெங்கடேஷ் வென்றார். (7,10)

**184 விக்கெட்டுக்கள்**

கொல்கத்தாவின் ரிங்கு சிங்கை அவுட்டாக்கிய மும்பையின் பியுஸ் சாவ்லா (184 விக்கெட்), ஐ.பி.எல்., அரங்கில் அதிக விக்கெட் வீழ்த்திய பந்துவீச்சாளர்கள் பட்டியலில் டுவைன் பிராவோவை (183) முந்தி 2ஆவது இடம் பிடித்தார். முதலிடத்தில் சகால் (200) உள்ளார்.

# உலகை வெல்லுமா இந்திய படை?

## துபே, சாம்சன், ரிஷாப் வாய்ப்பு
## தமிழ்நாட்டு தங்கங்களுக்கு மறுப்பு

"ரி20" உலகக் கிண்ணத் தொடருக்கான இந்திய அணி அறிவிக்கப்பட்டது. ரிஷாப் பன்ட், துபே, சாம்சன் வாய்ப்பு பெற்றனர். ராகுல் சேர்க்கப்படவில்லை.

மே.தீவுகள், அமெரிக்காவில் 9ஆவது "ரி20" உலகக் கிண்ணத் கிரிக்கெட் தொடர், ஜூன் 2-29ல் நடக்க உள்ளது. இதற்கான இந்திய அணித் தேர்வு நேற்று அகமதாபாத்தில் நடந்தது. இந்திய கிரிக்கெட் சபைச் செய லர் ஜெய் ஷா, தேர்வுக்குழு தலைவர் அகார்கர் பங்கேற்றனர்.

முடிவில் 15 பேர் கொண்ட உத்தேச இந்திய அணி அறிவிக்கப்பட்டது. அணித் தலைவராக ரோகித் சர்மா, துணைத் தலைவராக "சகலதுறை வீரர்" ஹர்திக் பாண்ட்யா தொடர்கின்றனர்.


இங்கிலாந்து தொடரில் அசத்திய ஜெய்ஸ்வால் இடம் பிடித் தார். இதேபோல ஐ.பி.எல்., தொடரில் "நம்பர்-1" துடுப்பாட்ட வீரராகத் தொடரும் கோலி (10 போட்டி, 500 ஓட்.), சூர்யகுமார் வாய்ப்பு பெற்ற னர். தொடக்க வீரர் சுப்மன் கில். மாற்று வீரராக தேர்வு செய்யப்பட்டிருப்பது அதிர்ச்சியான விடயம். சென்னை அணித் தலைவர் ருதுராஜூம் (9ல் 447 ஓட்.) புறக்கணிக்கப்பட்டுள்ளார்.

**தமிழகத்துக்கு "நோ"**

தமிழக வீரர் சாய் சுதர்சன், சாய் கிஷோர், நடராஜன் உள்ளிட்டோர் ஐ.பி.எல்., தொடரில் சிறப் பாக செயற்படுகின்றனர். இவர்களுக்கு வாய்ப்பு கிடைக்கவில்லை

**ரிஷாப் வருகை**

கார் விபத்தில் சிக்கி மீண்டு வந்த ரிஷாப் பன்ட், விக்கெட் கீப்பராக இடம் பிடித்தார். இரண்டாவது விக்கெட் கீப்பர் இடத்தை சஞ்சு சாம்சன் தட்டிச் சென்றார். இதனால் லோகேஷ் ராகுல், இஷான் கிஷானுக்கு இடமில்லாமல் போனது. சென்னை அணிக்காக அசத்தி வரும் ஷிவம் துபே, முதன் முறையாக "உலக" அணியில் சேர்க்கப்பட்டுள்ளார்.



**சகால் வாய்ப்பு**

வேகப்பந்து வீச்சுக்கு பும்ரா தலைமை ஏற்கிறார். மொஹமட் சிராஜ், அர்ஷ்தீப் சிங் அணியில் சேர்க்கப்பட்டனர். சுழற்பந்து வீச்சாளர் சகால், மீண்டும் சேர்க்கப்பட்டார். குல்தீப் யாதவ், அக்சர் படேல், ஜடேஜா வழக்கம் போல இடம் பிடித்துள்ளனர்.

**யார்... யார்**

ரோகித் சர்மா (அணித் தலைவர்), ஹர்திக் பாண்ட்யா (துணைத் தலைவர்), ஜெய்ஸ்வால், கோலி, சூர்யகுமார், ரிஷாப் பன்ட், சஞ்சு சாம்சன், ஷிவம் துபே, ஜடேஜா, அக்சர் படேல், குல்தீப் யாதவ், சகால், அர்ஷ்தீப் சிங், பும்ரா, சிராஜ்.

*** மாற்று வீரர்கள்**

சுப்மன் கில், ரிங்கு சிங், கலீல் அகமட், அவேஷ் கான்.

**சுப்மன் கில் "ஷாக்"**

மூன்றுவித கிரிக்கெட்டிலும் சிறப்பாக செயல்படுபவர் தொடக்க வீரர் சுப்மன் கில். இம்முறை இவர், மாற்று வீரராக தேர்வு செய்யப்பட்டது ரசிகர்களுக்கு "ஷாக்" கொடுத்துள்ளது.

ஐ.பி.எல்., தொடருக்கு முன் சிறப்பாக (15 "ரி20"ல் சராசரி 176.23 ஓட்.,) செயற்பட்டார் ரிங்கு சிங். ஆனால் சிக்சர் துபேயிடம் இடத்தை பறி கொடுத்தார். ஐ.பி.எல்., தொடரில் கடைசி கட்ட ஓவர்களில் அசத்தும் கலீல் அகமட், அவேஷ் கானுக்கும் முக்கிய அணியில் இடம் கிடைக்கவில்லை.


**தேறுமா "டாப் ஆர்டர்"**

ரோகித் சர்மா, ஹோலி என "டாப் ஓர்டர்" வீரர்கள் முந்தைய உலக தொடரில் "ரி20" போட்டிக்கு ஏற்ப அதிவேக ஓட்டக் குவிப்பை தரவில்லை என விமர்சனம் உள்ளது. மீண்டும் அதே வீரர்கள் தேர்வான நிலையில், இம்முறை எப்படி செயற்பட போகின்றனர் என எதிர்பார்ப்பு எழுந்துள்ளது. தொடக்க வீரராக அதிக ஓட்டங்கள் குவித்து வரும் சென்னை அணித் தலைவர் ருதுராஜூம் (9ல் 447 ஓட்.) புறக்கணிக்கப்பட்டுள்ளார்.

**மும்பை ஆதிக்கம்**

ரோகித் சர்மா, ஹர்திக் பாண்ட்யா, சூர்யகுமார், பும்ரா என நான்கு மும்பை வீரர்கள் சேர்க்கப்பட்டுள்ளனர். (7,10)

# கிரிக்கெட் வீரர் மரணம்



இங்கிலாந்தில் "செகண்ட் லெவன் சாம்பியன்ஷிப்" கிரிக்கெட் தொடர் (4 நாள் போட்டி) நடக்கிறது.


இதில் வொர்செஸ்டர்ஷயர் அணிக்காக பங்கேற்றார் ஜோஷ் பேக்கர் (வயது-20). சாமர்செட் அணிக்கு எதிராக முதல் இன்னிங்சில் (3வது நாள்) சுழலில் அசத்திய பேக்கர், 3 விக்கெட்டுக்களைச் சாய்த்தார்.

பின்னர் தனது வீட்டிற்கு திரும்பினார். மறுநாள் போட்டிக்கு வரவில்லை. இதையடுத்து இவரது நண்பர், வீட்டுக்குச் சென்று பார்த்த போது, அறையில் பேக்கர் இறந்து கிடந்தார்.

மரணத்துக்கான காரணம் தெரியவில்லை. அறையில் சந்தேகத்துக்கு இடமாக எதுவும் இல்லை என்பதால் பொலிஸார் விசாரணையை கைவிட் டனர். இறப்பதற்கு கடைசி சில மணி நேரத்துக்கு முன் பேக்கர், 3 விக்கெட் கைப்பற்றிய வீடியோ இணையத்தளங்களில் வைரல் ஆகி வருகிறது. (7,10)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சஜித் பிரேமதாஸவை சந்தித்து கலந்துரையாடிய நோர்வே தூதுவர்



(கொழும்பு)

எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ மற்றும் நோர்வே தூது வர் மே எலின் ஸ்டெனர் ஆகியோ ருக்கிடையில் விசேட சந்திப்பொன்று இடம்பெற்றுள்ளது.

இலங்கை அரசியல் மற்றும் பொருளாதார செயற்பாடுகள் குறித்து நேற்று முன்தினம் குறித்த சந்திப்பு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இலங்கையில் ஏற்பட்டுள்ள பொரு ளாதார நெருக்கடி குறித்து விளக்க மளித்துள்ள எதிர்க்கட்சித் தலைவர், அதிலிருந்து விடுபட தனது கட்சியின் திட்டங்கள் குறித்தும் விளக்கமளித் துள்ளதாக கூறப்படுகிறது.

மேலும் இந்த ஆண்டு நாட்டின் அரசியலில் ஒரு முக்கியமான ஆண்டு என்றும் இந்த ஆண்டில் முக்கியமான தேர்தல் நடைபெறும் என்றும் நோர்வே தூதுவருக்கு சஜித் பிரேமதாஸ தெரிவித்துள்ளார்.

இதன்போது பாராளுமன்ற உறுப் பினர் நிரோஷன் பெரேரா பாராளு மன்ற உறுப்பினர் காவிந்த ஜயவர் தன, நோர்வே தூதரகத்தின் இரண் டாவது செயலாளர் ஜொஹான் பிஜெர்கெம் ஆகியோரும் கலந்து கொண்டிருந்தமை குறிப்பிடத்தக் கது. (6)


## கண்ணீர் அஞ்சலி



தோற்றம்- 02.06.1938 மறைவு- 01.05.2024

எமது பாடசாலையின் ஆசிரியர்
ந.அகிலன் அவர்களுடைய அன்புத் தாயார்

அமரர்.
**நற்குணராசா மனோன்மணி**

அவர்களின் பிரிவினால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

(சி-0263)

ஆசிரியர் கழகம், யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி.


# பத்திர பதிவுதாரர் பிரதிநிதிகளுடன் விரைவில் பேச்சுவார்த்தை-சேமசிங்க

(கொழும்பு)



இறையாண்மை பத்திர பதிவுதாரர்க ளின் தற்காலிக குழுவின் பிரதிநிதிகளு டன் இலங்கை விரைவில் மற்றொரு சுற்று பேச்சுவார்த்தை நடத்தும் என நிதி இராஜாங்க அமைச்சர் செஹான் சேம சிங்க தெரிவித்துள்ளார்.

லண்டனில் நடத்தப்படவு ள்ள இந்த பேச்சுவார்த்தை க்கான சரியான திகதி கள் இன் னும் தீர்மானிக்கப்படவில்லை என்று அவர் குறிப்பிட்டுள்ளார். இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்து ள்ளதாவது, 12 பில்லியன் டொலர்களு க்கும் அதிகமான கடனை மறு சீரமை ப்பதற்கான சர்வதேச பத்திரதாரர்களின் முன் மொழிவை இலங்கை கடந்த மாதம் நிராகரித்தது.

இது, முக்கியமான சர்வ தேச நாணய நிதியத்தின் ஆதரவு மற்றும் இரண்டு வருட கடன் நெருக்கடியைத் தீர்ப்பதற் கான அதன் முய ற்சிகளை தாமதப்படு த்தும் என்ற கவலையை ஏற்படுத்தி யுள்ளது. முன்னதாக பங்குபத்திர காரர்க ளின் முன்மொழிவுக்கும் இலங்கை அரசாங்கத்தின் முன்மொழிவுக்கும் இடையில் பாரிய வித்தியாசங்கள் இல் லையென்று இலங்கையின் முக்கிய பொருளாதார நிபுணர் ஒருவரும் சுட்டிக் காட்டியிரு ந்தமை குறிப்பிடத்தக்கது என கூறியுள்ளார். (6)


## கண்ணீர் அஞ்சலி

எமது வித்தியாலய ஆசிரியர் திரு.வ.சுந்தரராஜன்
அவர்களின் பாசமிகு தந்தையார்

**"வைதிக கிரியா ரத்னா"**

அமரர். **சோமசுந்தர குருக்கள் வரதராஜசர்மா**

அவர்கள் காலமான செய்தியறிந்து துயரடைவதுடன் அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்



மண்ணில் - 23.04.1935
விண்ணில் - 23.04.2024

ஆசிரியர் நலன்புரிக்கழகம்,
யா/கோண்டாவில் இராமகிருஸ்ண மகா வித்தியாலயம்

(சி-0266)



## கண்ணீர் காணிக்கைகள்

மண்ணில் 01 . 03 . 1949



விண்ணில் 27 . 04 . 2024

குரும்பசிட்டி கிழக்கு, தெல்லிப்பளையை பிறப்பிடமாகவும், கோண்டாவில் மேற்கு செருக்கப்புலத்தை வசிப்பிடமாகவும் கொண்ட

அமரர்.திரு **பொன்னன் சிவனடியான்**

எமது சங்கத்தின் ஈவினை - 145 ஆம் இலக்க கிளை நிலைய அங்கத்தவராகிய திரு.சி.சிவகுமாரின் பாசமிகு தந்தையார் திரு.பொன்னன் சிவனடியான், 27.04.2024 ஆம் திகதி காலமானார். இவரது குடும்பத்தினருக்கும் உறவுகளுக்கும் எமது சங்கத்தின் அங்கத்தவர்கள், நிர்வாக சபை உறுப்பினர்கள், பணியாளர்கள் சார்பில் ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவித்துக் கொள்வதோடு அன்னாரின் ஆத்மா சாந்தி அடைய இறைவனை பிரார்த்திக்கின்றோம்.

பிரிவால் துயருறும் அங்கத்தவர்கள், நிர்வாக சபை உறுப்பினர்கள், பணியாளர்கள், சுன்னாகம் ப.தெ.வ.அ.கூ.சங்கம் (சி-0267)


# இராசிபலன்

04.05. 2024
சித்திரை 21, சனிக்கிழமை
ஏகாதசி பிற்பகல் 6.13 மணிவரை

பூரட்டாதி முன்னிரவு 7.54 மணிவரை
சுபநேரம் 2.56-4.26 மணிவரை
இராகுகாலம் 8.56-10.26 மணிவரை
ஏகாதசி விரதம்

அக்கினி நாள் ஆரம்பம்
சந்திராஷ்டமம் - புநர்பூசம், பூசம்

வளவன்

**மேஷம்**: நண்பர்கள் கடைசி நேரத்தில் கைகொடு த்து உதவுவர், புதிய பொறுப்புக்கள் வந்து சேரலாம், காரிய அலைச்சல்கள் சற்று அதிகரிக்கும், சுப விர யங்கள் கூடும் நாள்.

**ரிஷபம்**: அடிப்படை வசதி வாய்ப்புக்களைப் பெரு க்கிக் கொள்ள முற் படுவீர்கள், பொது வாழ்வில் மதிப்பும் மரியாதையும் உயரும் நாள், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும்.

**மிதுனம்**: பேச்சைக் குறைத்து செயலில் தீவிரம் காட் டுவீர்கள், தொழில் வளர்ச்சி கூடும், உற வினர்களும் நண்பர்க ளும் வலிய வந்து உதவுவார்கள், கௌரவமான நாள்.

**கடகம்**: மனதில் உற்சாகமும் மகிழ்ச்சியும் அதிகரி க்கும், சுணங்கிய காரி யங்களில் முன்னேற் றம் காண்பீர்கள், கோபத்தைக் குறைத்துக் கொள்வது நல்லது.

**சிம்மம்**: ஆதாயமில்லாத அலை ச்சல்கள் ஏற்படலாம், வாகன பழுதுச் செல வுகள் ஏற்படலாம், உடல் நலனில் கவனம் தேவை, சிலர் கௌரவக் குறைவாக நடந்து கொள்ளலாம்.

**கன்னி**: குதூகலம் தரும் பய ணங்கள் இடம்பெற லாம், சுற்றத்தார் வர வால் சுகம் கூடும் நாள், எடுத்த காரியங்களில் எளிதில் முன்னேற்றம் காண்பீர்கள்.

**துலாம்**: இயல்பான வாழ்க்கை யில் கௌரவமும் அந் தஸ்தும் உயரும் வாய் ப்புண்டு, செய்தொழி லில் மேன்மையுண்டு, உடல் நலன் சீராகும், சுப செய்திகள் வந்து சேரலாம்.

**விருச்சிகம்**: தொலைபேசி வழியில் கேட்கும் செய்திக ளால் உற்சாகமடைவீர் கள், உறவினர்களின் சந்திப்பு இடம்பெறலாம், புண் ணிய காரியங்களில் ஆர்வம் காட்டுவீர்கள்.

**தனுசு**: பெற்றோர் மீது பிரி யம் கூடும், எதிர் காலம் இனிமையாக அமைய திட்டங்கள் தீட்டுவீர்கள், ஆடம்பரப் பொருட் களை வாங்கும் எண்ணம் உரு வாகும்.

**மகரம்**: பிற இனத்தவரால் பெருமைகள் வந்து சேரலாம், தொலை பேசி வழியில் மகிழ் ச்சி தரும் செய்திகள் வந்து சேரலாம், தொழில் நலன் கருதி எடுத்த முயற்சிகள் கைகூடும்

**கும்பம்**: கேட்ட இடத்தில் உத விகள் கிடைத்து உற் சாகமடைவீர்கள், நண் பர்களால் வளர்ச்சி கூடும், பொது வாழ்வில் மதிப்பும் மரியாதையும் உயரும் வாய்ப்புண்டு.

**மீனம்**: திட்டமிட்ட காரியங்க ளில் திசை திருப்ப ங்கள் ஏற்படலாம், பக்குவமாக நடந்து காரியம் சாதிக்க வேண் டிய நாள், கற்பனை மிகுதியான நாள்.

தன்னம்பிக்கை இழந்தவன் எல்லாம் இழந்து விடுவான்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## யாழ். போதனா மருத்துவமனையின் மகப்பேற்று வைத்தியராக கஜேந்திரன்

(யாழ்ப்பாணம்)

யாழ். போதனா மருத்துவ மனையின் மகப்பேற்று மருத்துவ நிபுணராக ஜே.கஜேந்திரன் கடமைகளை பொறுப்பேற்க வுள்ளார். யாழ். போதனா மருத்துவ மனையில் கடமையாற்றிய பிரபல மகப்பேற்று வைத்திய நிபுணர் எ.சிறீதரன் நேற்று இட மாற்றம் பெற்று கொழும்பு டீ சொய்சா பெண்கள் மருத்துவமனைக்கு சென்றமையால் மகப்பேற்று மருத்துவ நிபுணர் ஜே.கஜேந்திரன் புதிதாக யாழ். போதனா மருத்துவமனையில் கடமைகளை பொறுப்பேற்க உள்ளார். எனவே இதுவரை மகப்பேற்று வைத்திய நிபுணர் எ.சிறீதரனின் பொறுப்பில் இருந்த விடுதியையும் அவருடைய கிளினிக் நோயாளர்களையும் மகப்பேற்று மருத்துவ நிபுணர் எஸ்.சிறீசரவணபவா பொறுப்பேற்கவுள்ளார் என மருத்துவ மனை பணிப்பாளர் த.சத்தியமூர்த்தி தெரிவித்தார்.



இது தொடர்பில் அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் இவ்விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது. அதேவேளை இதுவரை மகப்பேற்று மருத்துவ நிபுணர் எஸ்.சிறீசரவணபவா பொறுப்பில் இருந்த விடுதியையும் அவருடைய கிளினிக் நோயாளர்களையும் மகப்பேற்று வைத்திய நிபுணர் ஜே.கஜேந்திரன் பொறுப்பேற்கவுள்ளார்.

வைத்திய நிபுணர் எ.சிறீதரன் கடந்த 18 வருடங்கள் யாழ்.போதனா மருத்துவமனையில் கடமையாற்றிய வர் என்பது குறிப்பிடத்தக்கது.(6-33)

## வேலைவாய்ப்பு அமைச்சின் நடமாடும் சேவை புதுக்குடியிருப்பில்

(நெளுக்குளம்)

முல்லைத்தீவு புதுக்குடியிருப்பு பிரதேசசபை மைதானத்தில் "நானே ஆரம்பம் வெல்வோம் ஸ்ரீலங்கா -சிமாட் சூரன்களோடு" எனும் தொனிப்பொருளிலான தொழில் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சின் நடமாடும் சேவை நேற்று ஆரம்பமானது.



தெளிவூட்டல்கள் வெளிநாட்டு வேலைவாய்ப்புகள், வெளிநாடுகளில் பணிபுரிவோரின் முறைப்பாடுகளை பொறுப்பேற்றல், தொழில் வங்கியில் பதிவு செய்தல், உத்தேச தொழில் வாய்ப்புகள், சட்டம் தொடர்பான விழிப்புணர்வு, வெளிநாடுகளில் பணிபுரிவோரின் பிள்ளைகளுக்கு பாடசாலை உபகரணங்கள் வழங்கல்போன்றபல சேவைகள் நடமாடும் சேவையூடாக முன்னெடுக்கப்பட்டுள்ளது.

இதன்போது ருமேனியா, மத்திய கிழக்கு நாடுகள், இஸ்ரேல், ஐரோப்பா நாடுகளில் தொழில் ஒன்றை பெற்றுக் கொள்வது தொடர்பாக முகவர் நிறுவனங்களால் தெளிவூட்டல்களும் வழங்கிவைக்கப்படவுள்ளது.

இந்நிகழ்வில் தொழில் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சர் மனுஷ நாணயக்கார பிரதம அதிதியாக கலந்து கொண்டதுடன், அதிதிகளாக கிராமியப் பொருளாதார இராஜாங்க அமைச்சர் கே.காதர் மஸ்தான், வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் வினோநாகதாரலிங்கம், வட மாகாண பிரதம செயலாளர் இளங்கோவன், மாவட்ட அரசாங்க அதிபர் அ.உமாமகேஸ்வரன், பிரதேச செயலாளர்கள், மாவட்ட மற்றும்பிரதேச செயலக அதிகாரிகள், தொழில் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சின் அதிகாரிகள், படையினர், மாணவர்கள், பொதுமக்கள், வெளிநாட்டு வேலை வாய்ப்பு நிறுவனங்களின் பிரதி நிதிகள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (6-299)

## ஐஸ் போதைப்பொருளை உடமையில் வைத்திருந்த இருவர் கைது


(தருமபுரம்)

கிளிநொச்சி பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட பரந்தன் நகரப் பகுதியில் யாழ் பொலிஸ் போதைப் பொருள் ஒழிப்பு பிரிவினருக்கு கிடைக்கப்பெற்ற தகவலுக்கு அமை வாக நேற்று ஐஸ் போதைப் பொருளை உடமையில் வைத்திருந்த குற்றச்சாட்டில் இரண்டு சந்தேக நபர்கள் போதைப்பொருள் ஒழிப்பு பிரிவினரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபரிடம் இருந்து 11 கிராம் ஐஸ் போதைப் பொருள் பொலிஸாரால் பறிமுதல் செய் யப்பட்டுள்ளதுடன் இரண்டு சந்தேக நபர்களும் கிளிநொச்சி பொலிஸ் நிலையத்தில் தடயப் பொருட்களுடன் ஒப்படைக்கப்பட்டுள்ளனர்.

இச்சம்பவம் தொடர்பாக கிளிநொச்சி பொலிஸார் மேல திக விசாரணைகளை மேற் கொண்டு வருவதுடன் இர ண்டு சந்தேக நபர்களையும் கிளிநொச்சி நீதிமன்றில் முற்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக கிளிநொச்சி பொலிஸார் தெரிவித்துள்ளனர். (6-316)

## ஊர்காவற்றுறையில் இடம்பெற்ற நடமாடும் சேவையும், சட்ட ஆலோசனைகளும்



(சாவகச்சேரி)

சட்டத்திற்கும் மனித உரிமைகளுக்குமான நிலையத்தின் நிதி அனுசரணையில் நேற்று வெள்ளிக்கிழமை ஊர்காவற்துறை பிரதேசத்தில் இலவச நடமாடும் சேவை நிகழ்வும் - சட்ட ஆலோசனை முகாமும் இடம்பெற்றது.

ஊர்காவற்துறை பிரதேச செயலர் திருமதி மஞ்சுளாதேவி சதீசன் தலைமையில் இடம்பெற்ற மேற்படி இலவச நடமாடும் சேவை நிகழ்வில் சட்டத்திற்கும் மனித உரிமைக்கான நிலையத்தின் பணிப்பாளர் சட்டத்தரணி திருமதி அம்பிகா சிறிதரன், ஊர்காவற்றுறை பிரதேச செயலக உதவிப் பிரதேச செயலாளர் திருமதி பிரணவ சொரூபி சிவகரன் மற்றும் சட்டத்தரணி சாருஜா சிவனேசன் ஆகியோர் கலந்து கொண்டு நடமாடும் சேவை நிகழ்வை ஆரம்பித்து வைத்திருந்தனர்.

இதன்போது காலம் கடந்த பிறப்பு, இறப்பு, விவாகச்சான்றிதழ்கள் வழங்கல், தேசிய அடையாள அட்டைக்கான பதிவு, புகைப்படம் எடுத்தல் ஆகிய சேவைகளுடன்-தேவைப்படும் பொது மக்களுக்கு இலவச சட்ட ஆலோசனையும் வழங்கி வைக்கப்பட்டது.

மேலும், நிகழ்வில் ஊர்காவற்துறை பொலிஸார், திரு மணப் பதிவாளர், கிராம அலுவலர்கள், ஊர்காவற்துறை பிரதேச செயலக உத்தியோகத்தர்கள், சமாதான நீதவான் ஆகியோர் பொதுமக்களுக்கான சேவையை வழங்கியிருந்தனர்.

மேற்படி இலவச நடமாடும் சேவை ஊடாக ஊர்காவற்துறை பிரதேச செயலர் பிரிவிற்குட்பட்ட 15 கிராம அலுவலர் பிரிவுகளிலும் உள்ள நூற்றுக்கணக்கான மக்கள் சேவைகளைப் பெற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது. (6-30)

செல்வம் பொங்கிடும் அட்ஷய திருதியை நன்னாளில்
சகல சௌபாக்கியங்களும் பெற்று தரும் விசேஷ தினத்தில்
எங்களுடன் கொண்டாட பெறுமதி மிக்க வாடிக்கையாளர்களை
அகமகிழ்வுடன் அழைக்கின்றோம்.

மயூரன்ஸ் நகைமாளிகை



அட்ஷய திருதியை தினமாகிய
10.05.2024 அன்று
சிறப்பு விலைக் கழிவுகளும்
பெறுமதிமிக்க பரிசில்களும்
உங்களுக்காக
காத்திருக்கின்றன என்பதை
அறியத் தருவதையிட்டு அக
மகிழ்கிறோம்.




இல. 07, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
T.P. 021 222 3015, 077 651 0251.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குரு பெயர்ச்சி 2024-2025 குரு பார்வையின் பொதுப் பலன்களும் பாக்கியமும்

ஆதி பரம்பொருளாகிய இறைவன் தன் சக்தியை பிரம்மா, விஷ்ணு, ருத்ரன் என மூன்று அம்சங்களாகப் படைத்தார். பிரம்மதேவர் படைப்புத் தொழிலில் தனக்கு உதவிபுரிய சப்த ரிஷிகளை உருவாக்கினார். அந்த ஏழு ரிஷிகள் மூலம் மனித, அசுர இனங்கள் தோன்றின. அந்த ஏழு ரிஷிகளில் ஆங்கிரஸ முனிவரின் மகன் தான் பிரகஸ்பதி எனும் வியாழன் பகவான்.

ஜோதிட சாஸ்திரத்தில் முழு சுபகிரகம் என்ற அமைப்பையும் பெருமையும் பெற்ற ஒரே கிரகம், பிரகஸ்பதி என்று அழைக்கப்படும் குரு பகவான் ஆவார். இவர் தேவர்களுக்கு எல்லாம் தலைவன். நம் வாழ்வில் 2 விடயங்கள் மிக முக்கியம். அதாவது தனம் என்று சொல்லக்கூடிய பணம், 2 ஆவது புத்திர சம்பத்து என்று சொல்லக்கூடிய குழந்தை செல்வம். இந்த இரண்டையும் அளிக்க கூடிய சர்வ வல்லமை பெற்ற கிரகம் குரு. குருவுக்கு மேலும் பல்வேறு விதமான ஆதிக்கங்கள் உள்ளன. ஞானம், கூர்ந்த மதி நுட்பம், மந்திரி யோகம், நிதித்துறை, நீதித்துறை, வங்கி, கல்வி, வேத உபதேசம் போன்றவை எல்லாம் குருவின் அதிகாரத்துக்கு உட்பட்டவை. அவரது அருள் இருந்தால் இந்த துறைகளில் பிரகாசிக்கலாம்.

**வியாழன் நோக்கம்:** திருமணம் என்பது அனைவரின் வாழ்க்கையிலும் முக்கியமானது. திருமணத்துக்கு மிக முக்கிய கிரகமாக குரு பகவான் திகழ்கிறார். குரு பார்வை என்று சொல்லப்படும் வியாழன் நோக்கம் திருமணத்துக்கு முக்கியமாக தேவைப்படுகிறது. வியாழன் நோக்கம் வந்து விட்டதா என்று பார்த்த பிறகே திருமண விடயங்களை ஆரம்பிக்க முடியும்.

**குருவின் பலம்:** குரு எந்த ஸ்தானத்தை பார்க்கிறாரோ அந்த ஸ்தானம் பலமும், விருத்தியும் அடைகிறது. குரு பார்வை சர்வ தோஷ நிவர்த்தி. குருவுக்கு 5,7,9 ஆகிய பார்வைகள் உள்ளன. அதாவது குரு இருக்கும் இடத்தில் இருந்து 5,7,9 ஆகிய இடங்களை பார்வையிடுகிறார். ஐந்தாம் பார்வையும், ஒன்பதாம் பார்வையும் சிறப்பு பார்வைகளாகும்.

**மேஷத்தில் இருந்து ரிஷபத்துக்கு:** நிகழும் மங்களகரமான ஸ்வஸ்திஸ்ரீகுரோதி வருஷம் உத்தராயணம் வஸந்த ரிது சித்திரை மாதம் 18 ஆம் நாள் இதற்குச் சரியான ஆங்கில திகதி 01.05.2024 அன்றைய தினம் கிருஷ்ணபக்ஷ அஷ்டமியும் - புதன்கிழமையும் - திருவோண நட்சத்திரமும் - சுப நாம யோகமும் - பவ கரணமும் - சித்த யோகமும் கூடிய சுபயோக சுப தினத்தில் மாலை 05.01 இற்கு துலாம் லக்னத்தில் குரு பகவான் மேஷ இராசியிலிருந்து ரிஷப இராசிக்கு மாறுகிறார்.

தற்போது மாறக்கூடிய குரு பகவான் ரிஷப இராசியில் இருந்து தனது ஐந்தாம் பார்வையால் கன்னி இராசியையும் - ஏழாம் பார்வையால் விருச்சிக இராசியையும் - ஒன்பதாம் பார்வையால் மகர இராசியையும் பார்க்கிறார். குரு பகவானுக்கு ஸ்தான பலத்தை விட திருக பலமே அதிகம். அதாவது இருக்கும் இடத்தின் பலத்தினை விட பார்க்கும் பலமே அதிகம். எனவே குருவின் பார்வை பெறும் ராசிகள் பூரண பலன்கள் பெறும்.

**பொதுவாக ராசிகள் பெறும் பலன் களின் அளவுகள்:**

**நன்மை பெறும் இராசிகள்:** கடகம் - கன்னி - விருச்சிகம் - மகரம்; நன்மை தீமை இரண்டும் கலந்து **பலன்கள் பெறும் இராசிகள்:** மேஷம் - ரிஷபம் - சிம்மம் - கும்பம் : **பரிகாரத்தின் மூலம் பயன்பெறும் ராசிகள்:** மிதுனம் - துலாம் - தனுசு - மீனம்

**குருவால் ஏற்படும் பாக்கியங்கள்:** பக்தி, சிரத்தை, வழிபாடு, புனித சிந்தனை, யாத்திரை, நல்லொழுக்கத்தைக் கடைப்பிடித்தல் போன்ற விடயங்கள் குரு பலத்தால் பெறக்கூடியதாகும். ஒருவர் பெரிய மத குருவாக இருக்கிறார் என்றால் அவருக்கு குரு நல்ல பலம் பெற்றிருக்கிறார் என்று பொருள். ஒழுக்கசீலராக இருப்பவர்களின் ஜாதகத்தில் குரு பலம் பெற்றிருப்பார். உலகத்தார் அனைவரும் ஒருவரை மதிக்கிறார்கள் என்றாலும் அவரின் ஜெனன கால ஜாதகத்தில் குரு பலம் நிறைந்திருக்கிறது என பொருள். அரிய சாதனைகளை செய்வதற்கு குரு பலமே பிரதானமாக இருக்கிறது. வேத சாஸ்திரம், விஞ்ஞானம் ஆகியவற்றில் புகழ் அடைவதற்கு மூலபலம் குருபலம் தான்.

**குருவின் பலம்:** எந்த ஒரு ஜாதகத்திலும் குருவின் இருப்பு மிக மிக முக்கியம். இதை வைத்துதான் குல தெய்வ அனுகிரஹம் - முன்னோர்கள் ஆசீர்வாதம் ஆகியவற்றை கணிக்க முடியும். குரு திரிகோணத்தில் இருந்தால் பெரிய பலம் என்றும், கேந்திரத்தில் இருந்தால் மத்திம பலம் என்றும், மறைவுஸ் தானத்தில் இருந்தால் அதம பலம் என்றும் எடுத்துக் கொள்ள வேண்டும். இதில் சார பலம் மிக முக்கியம்.

**குரு உங்கள் இராசிக்கு யோகக்காரரா?** - மேஷம் இராசிக்கு குரு 9, 12 இடங்களுக்கு உரியவர் ஆகிறார். 9-ம் இடம் பாக்கிய ஸ்தானம். எனவே யோககாரகர். ரிஷபம் இராசிக்கு 8, 11 இற்கு உடையவர். ஆதிபத்திய சிறப்பு இல்லை. மிதுனம் இராசிக்கு 7, 10க்கு அதிபதி. சுபகிரகங்கள் கேந்திர இடங்களில் (4, 7, 10) அதிபதியாக இருக்கக் கூடாது என்பது விதி. எனவே மிதுனம் லக்னகாரர்களுக்கு குரு நன்மை செய்வது அரிது. இருப்பினும் இது பொது விதியே. கடகம் இராசிக்கு 6, 9 இற்கு உடையவர் ஆகிறார். 9 ஆம் அதிபதி யோககாரகர். சிம்மம் இராசிக்கு 5, 8 ஆம் இடங்களுக்கு அதிபதி. 5 ஆம் வீடு ஆதிபத்தியம் யோகத்தைக் கொடுக்கும்.

கன்னி இராசிக்கு 4, 7 ஆம் வீடுகளுக்கு அதிபதியாகிறார் குரு. எனவே மிதுனம் இராசிக்கு சொன்ன விதியே இதற்கும் பொருந்தும். துலாம் இராசியில் பிறந்தவர்களுக்கு குரு லக்னத்திலிருந்து 3, 6 ஆகிய இடங்களுக்கு உரியவர் ஆகிறார் எனவே யோகம் கொடுப்பது அரிது. விருச்சிகம் இராசியில் பிறந்தவர்களுக்கு 2, 5ஆம் வீடுகளுக்கு அதிபதியாவதால் நன்மைகளைக் கொடுப்பார். தனுசு, மீனம் லக்னங்களுக்கு இவரே அதிபதியாகவும் விளங்குவதால் கேந்திரம் பெற்றிருந்தால் மட்டும் யோகத்தைக் கொடுப்பதில் தாமதமாகலாம். மகர இராசியில் உதித்தவர்களுக்கு யோகத்தைக் கொடுப்பதில் சிரமம் ஏற்படும். கும்ப இராசியில் ஜெனித்தவர்களுக்கு தனகாரகன் என்ற முறையில் நன்மைகளைச் செய்வார்.



**உடல் உறுதி, அகத் தெளிவு:** உடலில் உறுதியும் உள்ளத்தில் தெளிவையும் கொடுப்பவர் குரு மட்டுமே. புனித பணிகளுக்கும் புண்ணியச் செயல்களுக்கும் புனித யாத்திரைக்கும் காரணம் குரு. சுபிட்சம், சந்தோஷம், மலர்ச்சி, பெருந்தன்மை, மென்மை, திறமை, நேர்மை, திண்ணம், எடுத்த முடிவில் வைராக்கியம் போன்றவைகளுக்கும் குருவே கர்த்தாவானவர். ஒருவர் உறுதிவாய்ந்த ஓர் உன்னதமான அழகான வீட்டை கட்டிக் கொண்டு அதில் தங்கி வாழ வேண்டுமானால் அவருடைய ஜாதகத்தில் குரு பலமாக இருக்கிறார் என்று பொருளாகும். குருவால் எல்லா செல்வங்களையும் நம்மால் பெற முடியும். அதிலும் மிக முக்கியமான மக்கள் செல்வத்தை அளிப்பவர் குரு. அணிகலன்கள், ஐஸ்வர்யம், சுக வாழ்வு, சுபிட்சம் இவற்றையெல்லாம் வழங்கும் ஆற்றல் கொண்ட குரு பகவானுக்கு ஜாதகத்தில் தக்க இடமுண்டு. (தொடரும்...)

# மனோகணேசன் - பிரான்கொயிஸ் சந்திப்பு



(கொழும்பு)

தமிழ் முற்போக்கு கூட்டணி தலைவர், கொழும்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரான மனோகணேசனுக்கும், இலங்கைக்கான பிரான்சிய தூதுவர் ஜோன் பிரான்கொயிஸ் பெசட்டுக்கும் இடையில் சந்திப்பு கொழும்பில் உள்ள பிரான்சிய தூதுவரின் இல்லத்தில் நேற்று நடைபெற்றது.

இதன் போது, இலங்கைக்கு பிரான்ஸ் மற்றும் ஐரோப்பிய ஒன்றியம் வழங்கும் உதவிகள் இலங்கையின் தமிழ் மக்களுக்கும் பின்தங்கிய பெருந்தோட்ட மக்களுக்கும் கிடைப்பதை உறுதிபடுத்துமாறு மனோகணேசன் பிரான்சிய தூதுவரை கேட்டு கொண்டார். இக்கலந்துரையாடலில் பிரான்சிய தூதுவருடன், தூதரக துணை தலைமை அதிகாரி திருமதி மாரி நொயெல்லா தூரிசும் (6)

# அதிகரித்து செல்லும் பொருட்களின் விலை



(கொழும்பு)

எரிபொருட்களின் விலைகள் குறைக்கப்பட்டாலும் உணவுப் பொருட்கள் உள்ளிட்ட ஏனைய பொருட்களின் விலை கள் குறையவில்லை என சபாநாயகர் மஹிந்த யாபா அபேவர்தன தெரிவித்துள்ளார்.

எரிபொருள் மற்றும் மின்சாரக் கட்டணம் என்பன குறைக்கப்பட்ட போதிலும் ஏனைய பொருட்களின் விலைகள் தொடர்ந்தும் அதிகரித்துச் செல்வதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இந்த விடயம் தொடர்பில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிற்கு தெளிவுபடுத்த உள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார். எனினும் விலை குறைக்கப்படும் போது மக்களுக்கு அந்த நிவாரணங்கள் கிடைக்கப் பெறுவதில்லை என சபாநாயகர் மகிந்த யாபா அபேவர்தன தெரிவித்துள்ளார். (6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாரதம்

# விஜயகாந்த் நினைவிடத்திற்கு உலக சாதனை விருது



(சென்னை)
மறைந்த நடிகரும், அரசியல்வாதியுமான விஜயகாந்த் நினைவிடத்திற்கு உலக சாதனை விருது அறிவிக்கப்பட்டுள்ளது.

நடிகரும், தே.மு.தி.க தலைவருமான விஜயகாந்த் கடந்த டிசெம்பர் மாதம் 28 ஆம் திகதி உடல் நலக் குறைவு காரணத்தால் உயிரிழந்தார். இவரது மறைவு தமிழகத்தில் பெரும் சோகத்தை ஏற்படுத்தியது.


இவரது இறுதி ஊர்வலத்தில் கலந்து கொள்ளாத பல திரைப் பிரபலங்கள், தே.மு.தி.க தொண்டர்கள், நிர்வாகிகள் மற்றும் பொது மக்களும் அவரது நினைவிடத்திற்குச் சென்று அஞ்சலி செலுத்தினர்.

அப்போது, அஞ்சலி செலுத்த வருபவர்கள் பசியோடு செல்லக் கூடாது என்பதற்காக தினமும் அன்னதானம் வழங்கப்பட்டது.

இந்நிலையில், விஜயகாந்தின் நினைவிடத்திற்கு லிங்கன் புக் ஆஃப் ரெக்கார்ட்ஸ் சார்பில் உலக சாதனை விருது அறிவிக்கப்பட்டுள்ளது.

மறைந்த தே.மு.தி.க தலைவர் விஜயகாந்த் நினைவிடத்தில் 125 நாட்களில் தமிழகம் முழுவதும் 15 லட்சத்திற்கும் மேற்பட்டோர் அஞ்சலி செலுத்தியுள்ளனர். மேலும், பார்வையாளர்களுக்கு உணவு வழங்கும் உலகின் முதல் நினைவுச்சின்னமாக இது போற்றப்படுகிறது. (6)

# வாக்களிக்க முடியாமல்
## திரும்பிச் சென்ற போரிஸ் ஜோன்சன்



(லண்டன்)
பிரித்தானியாவில் உள்ளாட்சி தேர்தல் முடிவுகள் வெளியாகி வருகிறது. இதுவரை வெளியான தரவுகளின் அடிப்படையில் தொழிற்கட்சி ஆதிக்கம் செலுத்தி வருவதாகவே கூறப்படுகிறது.

அறிவிக்கப்பட்ட முதல் 13 வார்டுகளில் 10இல் தொழிற்கட்சி வெற்றி பெற்றுள்ளது, மொத்தம் 49 ஆசனங்களைக் கொண்ட கவுன்சிலில் அவர்களுக்கு 25 ஆசனங்கள் கிடைத்துள்ளன.

இன்னும் 4 ஆசனங்களுக்கான முடிவுகள் வெளிவர உள்ளன. இதனிடையே வெளியான கருத்துக்கணிப்புகளில் கன்சர்வேடிவ் கட்சி 500 கவுன்சில் ஆசனங்களை இழக்கலாம் என்றே கூறப்படுகிறது.

இதனிடையே, பிரதமர் ரிஷி சுனக் எங்கே எப்போது வாக்களித்தார் என்ற தகவல் வெளியிடப் படவில்லை என்றும், அவர் நேரிடையாக சென்றாரா அல்லது அஞ்சல் முறையில் வாக்களித்தாரா என்ற தகவல் இல்லை என்றே கூறப்படுகிறது.

இந்த நிலையில், பிரித்தானியாவில் தேர்தலில் அடையாள அட்டை கட்டாயம் என விதிகளை திருத்திய முன்னாள் பிரதமர் போரிஸ் ஜோன்சன், அடையாள அட்டை இல்லாததால் வாக்களிக்க முடியாமல் திரும்பியதாக தகவல் வெளியாகியுள்ளது. (6)

# இஸ்ரேலுட
## நடவடிக்கைகளை

(அங்காரா)

**இஸ்ரேலுடனான தனது அ**
**வர்த்தக நடவடிக்கைகளையும் நி**
**கொண்டதாக துருக்கி அறிவித்துள்**

கடந்த ஏப்ரல் மாதம், 54 தயாரிப்பு நிறுவனங்களின் ஏற்றுமதியை தடை செய்த துருக்கி அரசு, அடுத்தகட்ட நடவடிக்கையாக, இஸ்ரேலுடனானஅனைத்து வர்த்தக நடவடிக்கைகளையும் நிறுத்தியுள்ளது.

இது தொடர்பாக துருக்கி வர்த்தக அமைச்சகம் வெளியிட்டுள்ள அறிக்கையில்,

படுகொலை, மனிதாபிமான பேரழிவு, இஸ்ரேலால் ஏற்படும் அழிவுகள் தொடர்கின்றன.

மேலும், இஸ்ரேலிய அரசாங்கம் சர்வதேச போர் நிறுத்த முயற்சிகளை புறக்கணித்ததுடன், பாதிக்கப்பட்டவர்களுக்கு மனிதாபிமான உதவியையும் தடுத்தது.

இஸ்ரேலிய அரசாங்கம் காசாவிற்கு மனிதாபிமான உதவிகளை தடையின்றி போதுமான அளவில் வழங்க அனுமதிக்கும் வரை இந்த புதிய நடவடிக்கைகளை அரசு செயற்படுத்தும் என குறித்த அறிக்கையில் தெரிவித்துள்ளது.

ஹமாஸ் அமைப்பினரின் தாக்குதலுக்கு பதிலடியாக,

காசா ப
இஸ்ரே
பாலா
கட்டுப்
வந்துவ
ஹ
முற்றி
தாக்கு
தெரிவ
தற்ப
இலக்
தாக்கு
றது.
இத்
தீனர்க்
துக்குப்

# நடுவானில் இயங்க மறுத்த இயந்தி
## கடற்கரையில் தரையிறங்கிய விமா

(வோஷிங்டன்)
அமெரிக்காவின் நியூயோர்க் வான் பரப்பில் பறந்த விமானம் ஒன்றின் இயந்திரம் நடுவானில் இயங்க மறுத்த நிலையில் திடீரென கடற்கரையில் தரையிறக்கப்பட்டமை அப்பகுதியில் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

விமானம் கடற்கரையில் தரையிறங்கிய நிலையில், விமானி மற்றும் பயணிகளுக்கு எவ்வித காயமும் ஏற்படவில்லை. கடற்கரையில் தரையிறங்கியதால் விமானத்திற்கு பலத்த சேதம் ஏற்பட்டது.

விமானத்தின் இயந்திரத்தில் கோளாறு ஏற்பட்டதால் அவசரமாக தரையிறக்கியதாக விமானி தெரிவித்துள்ளார்.இந்த சம்பவம் தொடர்பான காணொளி சமூக வலைதளங்களில் வைரல் ஆகி வருகிறது.

ஒற்றை என்ஜின் கொண்ட சிறிய ரக

விமானம் ஒன்
கடற்கரையில் அ
தரையிறங்கிய
வானில் மறந்
விமானத்தின் எ
செயற்படாமல் பே
இதன் கார
விமானத்தை இ
60 வயது விமா
கரையில் தரை
னார், என்று அ
வான்வழி கட்
ஆணையம் தெ
ள்ளது.



# லண்டன் மேயர் தேர்தலில்
## இந்திய வம்சாவளி வேட்பாளர்

(லண்டன்)
லண்டன் மேயர் தேர்தலில், தற்போதைய மேயரான சாதிக்கானை எதிர்த்துப் போட்டியிடுபவர்களில் ஒருவர், இந்திய வம்சாவளியினரான தருண் குலாட்டி.

இந்தியாவின் டில்லியில் பிறந்தவரான தருண், தனது பின்னணி மற்றும் நிதித் [illegible] தனக்கு மேயர் தேர்தலில் வெற்றியை பெற்றுத் தரும் என நம்புகிறார்.

MBA படித்தவரான தருண், HSBC வங்கியில் சர்வதேச மேலாளராக பணியாற்றியவர் ஆவார். ஆகவே, தனக்கு பணத்தைக் கையாளும் முறை தெரியும் என்றும், தன்னால் லண்டனுக்கு புதிய பணத்தைக் கொண்டுவரமுடியும் என்றும் கூறுகிறார் தருண்.

என்றாலும், பிரித்தானிய ஊடகங்கள், மேயர் தேர்தலில் மீண்டும் சாதிக்கான் தான் வெற்றி பெறுவார் என கணித்துள்ளது குறிப்பிடத்தக்கது. (6)

# விட்
## வெ

(வோஷி
சில அ
மனிதர்க
விலங்குக
அதுபோன்
நோயால்
நாய் 2 அ
வதும் வெ

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ...டனான வர்த்தக ...ளை நிறுத்திய துருக்கி



**... அனைத்து ...யும் நிறுத்திக் ...த்துள்ளது.**

காசா மீது போர் தொடுத்துள்ள இஸ்ரேல், காசாவின் பெரும்பாலான பகுதிகளை தனது கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்துள்ளது.

ஹமாஸ் அமைப்பை முற்றிலும் அழிக்கும் வரை தாக்குதல் தொடரும் என தெரிவித்துள்ள இஸ்ரேல், தற்போது தனது கடைசி இலக்கான ரஃபா நகரிலும் தாக்குதல் நடத்தி வருகிறது.

இத் தாக்குதலில் பாலஸ்தீனர்கள் உட்பட 34 ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் கொல்லப்பட்டுள்ளனர்.

ரஃபா நகரில் தாக்குதலை தீவிரப்படுத்தினால் மிகப்பெரிய பேரழிவு ஏற்படும் என தெரிவித்து, போரை நிறுத்த உலக நாடுகள் தொடர்ந்தும் வலியுறுத்தி வருகின்றன.

இந்நிலையிலேயே, காசாவில் நிலைமை நாளுக்கு நாள் மோசமடைந்து வருவதாலும், இஸ்ரேலால் ஏற்படும் பாதிப்புகள் நீடிப்பதாலும் இஸ்ரேலுடனான வர்த்தக நடவடிக்கைகளை துருக்கி அரசு நிறுத்தியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (6)

# சீனாவில் மண்சரிவு 48 பேர் உயிரிழப்பு

(பிஜிங்)

தெற்கு சீனாவின் குவாங் டொங்கிலுள்ள அதிவேக நெடுஞ்சாலையில் ஏற்பட்ட மண்சரிவில் சிக்கி உயிரிழந்தோர் எண்ணிக்கை அதிகரித்துள்ளதாக அந்நாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

முதற்கட்டமாக 19 பேர் உயிரிழந்துள்ளதாக செய்திகள் வெளியாகி இருந்த நிலையில், மண்சரிவில் சிக்கி தற்போது வரை 48 பேர் உயிரிழந்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

கனமழை காரணமாக தெற்கு சீனாவின் குவாங் டொங்கிலுள்ள அதிவேக நெடுஞ்சாலையில் 18 மீற்றர் பகுதி மண்சரிவினால் பாதிக்கப்பட்டுள்ளதுடன், பல வாகனங்கள் சேதமடைந்துள்ளன.

அத்துடன், விபத்தில் பலர் படுகாயமடைந்துள்ளதாகவும், அவர்கள் வைத்திய சாலையில் சிகிச்சை பெற்று வருவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

இந்நிலையில், மண்சரிவில் சிக்கியவர்களை மீட்கும் பணியில் சுமார் 500 பேர் ஈடுபடுத்தப்பட்டுள்ளதாக அந்நாட்டு அதிகாரிகள் குறிப்பிட்டுள்ளனர். (6)

# பள்ளத்தில் கவிழ்ந்து விபத்துக்குள்ளான பேருந்து 20 பயணிகள் பலி



(இஸ்லாமாபாத்)

வடமேற்கு பாகிஸ்தானில், பேருந்து ஒன்று பள்ளத்தில் கவிழ்ந்து விபத்துக்குள்ளானதில் 20 பயணிகள் உயிரிழந்துள்ளனர்.

கில்ஜிட் பால்டிஸ்டான் மாகாணத்தில், டியாமெர் மாவட்டத்திலுள்ள காரகோரம் அதிவேக வீதியில் பயணித்துக்கொண்டிருந்த பேருந்து ஒன்றே இவ்வாறு பள்ளத்தில் கவிழ்ந்து விபத்துக்குள்ளாகியுள்ளது.

ராவல்பின்டியிலிருந்து ஹன்சா நோக்கி பயணித்துக்கொண்டிருந்த பேருந்து சாரதியின் கட்டுப்பாட்டை இழந்து இவ்வாறு விபத்துக்குள்ளாகியுள்ளதாக பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

குறித்த பேருந்தில் எத்தனை பேர் என்பது குறித்த தகவல்கள் இதுவரை சரியாக வெளிவரவில்லை.

எனினும், இதுவரை 20 பேரின் சடலங்கள் மீட்கப்பட்டுள்ளதாகவும், 15 பேர் படுகாயமடைந்துள்ள நிலையில், அவர்கள் சிலாஸ் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட் டுள்ளதாகவும் பொலிஸார் தெரிவிக்கின்றனர். மேலும் காயமடைந்தவர்களில் பலரது நிலைமை கவலைக்கிடமாக இருப்பதாகவும், உயிரிழப்புக்கள் மேலும் அதிகரிக்கலாம் எனவும் அஞ்சப்படுகின்றது. (6)

# ...இயந்திரம் ...விமானம்

...னம் ஒன்று செடார் ...கரையில் அவசரமாக ...யிறங்கியது. நடு...ில் பறந்த போது ...னத்தின் என்ஜின் ...படாமல் போனது.

...தன் காரணமாக ...னத்தை இயக்கிய ...வயது விமானி, கடற்...யில் தரை யிறக்கி ...என்று அமெரிக்க ...வழி கட்டுப்பாட்டு ...ணயம் தெரிவித்து... (6)

# காசாவில் சேதமடைந்த வீடுகளை சீரமைக்க 2040 வரை காலம் எடுக்கும்

## ஐ.நா தெரிவிப்பு

(ஜெருசலேம்)

இஸ்ரேல் தாக்குதலில் காசாவில் பாதிக்கப்பட்ட வீடுகளை சீரமைப்பதற்கு 2040 வரை ஆகும் என ஐ.நா தெரிவித்துள்ளது.

கடந்த ஆண்டு ஒக்டோபர் மாதம் 7ஆம் திகதி ஹமாஸ் அமைப்பினர் திடீரென இஸ்ரேல் எல்லைக்குள் புகுந்து அதிரடித் தாக்குதல் நடத்தினர். இதில் 1200 பேர் கொல்லப்பட்டனர்.

250 பேர் பிணைக்கைதிகளாக பிடித்துச் செல்லப்பட்டனர். அதற்கு பதிலடியாக காசா மீது இஸ்ரேல் தாக்குதல் தொடங்கியது. ஏழு மாதங்களாக தாக்குதல் நடத்தி வருகிறது. இதில் ரஃபா நகரைத் தவிர மற்ற நகரங்கள் ஏறக்குறைய சீர்குலைக்கப்பட்டுள்ளன.

இதில் 32 ஆயிரத்திற்கும் மேற்பட்ட பாலஸ்தீன பொது மக்கள் கொல்லப்பட்டுள்ளனர்.

இந்நிலையில் தற்போது முகாம்களில் வசித்து வரும் பாலஸ்தீன மக்களுக்கு அடிப்படை வசதிகள் கிடைக்க ஐ.நா. முயற்சி மேற்கொண்டு வருகிறது.

மனிதாபிமான உதவிகள் கிடைக்க இஸ்ரேல் உதவ வேண்டும் என்று ஐ.நா. வலியுறுத்தியுள்ளது. அமெரிக்கா, ஐ.நா. உள்ளிட்டவைகளின் வலியுறுத்தலின்படி நேற்று முன்தினம் இஸ்ரேல் வடக்கு காசாவிற்கான ஒரு எல்லையை திறந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (6)

# விட்டிலிகோ பாதிப்பு காரணமாக வெள்ளையாக மாறிய கறுப்பு நாய்

(வோஷிங்டன்)

சில அரிதான நோய்கள் மனிதர்களுக்கு மட்டுமல்ல விலங்குகளையும் தாக்கும். அதுபோன்று ஒரு அரிதான நோயால் பாதிக்கப்பட்ட கறுப்பு நாய் 2 ஆண்டுகளில் முழுவதும் வெள்ளையாக மாறியுள்ளது. இது தொடர்பான புகைப்படங்கள் சமூக வலைத்தளங்களில் பரவி வருகிறது.

தோல் அதன் இயற்கையான நிறத்தை இழந்து வெளிறிய வெள்ளை நிறமாக மாறும் நிலைக்கு விட்டிலிகோ என்று பெயர். இந்த வகை அரிய நோயால் சில மனிதர்கள் பாதிக்கப்பட்டுள்ள நிலையில், நாய் ஒன்றும் பாதிக்கப்பட்டுள்ளது.

அமெரிக்காவின் ஒக்லஹோமா பகுதியை சேர்ந்த ஸ்மித் என்பவர் வளர்த்து வரும் பஸ்டர் என்ற பெயர் கொண்ட அந்த 4 வயது நாய் கடந்த 2 ஆண்டுகளுக்கு முன்பு முழுவதும் கருப்பு நிறத்தில் இருந்தது. இந்நிலையில் விட்டிலிகோ பாதிப்பு காரணமாக கடந்த 2 ஆண்டுகளில் நிறம் படிப்படியாக மாறி தற்போது முழுவதும் வெள்ளை நிறமாகி உள்ளது.



இதுதொடர்பான புகைப்படங்களை ரெடிட் தளத்தில் பதிவிட, அது இணையத்தில் வேகமாக பரவிவருகிறது. (6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நான்கு மாதங்களில் மாத்திரம்
# எலிக்காய்ச்சலால் 17 பேர் பாதிப்பு
## இரு மரணங்கள் பதிவு

(கொழும்பு)

**நாட்டின் சில பகுதிகளில் எலிக்காய்ச்சல் அபாயம் காணப்படுவதாகவும் மக்கள் எச்சரிக்கையுடன் செயற்பட வேண்டுமென வும் சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகம் தெரிவித்துள்ளது.**

இந்த வருடத்தின் முதல் 4 மாதங்களில் மாத்திரம் 17 பேர் எலிக் காய்ச்சலால் பாதிக்கப்பட்டுள்ளதுடன் 2 மரணங்கள் பதிவாகியுள்ளதாகவும் சுட்டிக் காட்டியுள்ளது.

இந்நிலையில், அடையாளம் காணப்பட்ட பகுதிகளில் எலிக்காய்ச்சலுக்கு எதிரான பாதுகாப்பு குறித்த அறிவுறுத்தல்கள் அடங்கிய அறிவிப்புப் பலகைகள் நிறுவப்பட்டு பொது மக்களுக்கு விழிப்புணர்வு நிகழ்ச்சிகளும் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

இதன்படி மினுவாங்கொடை சுகாதார வைத்திய பிரிவிலுள்ள 15 கிராமங்களில் எலிக்காய்ச்சல் அபாயம் இருக்கின்ற 65 இடங்களைத் தெரிவு செய்வதற்கு சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகம் நடவடிக்கை எடுத்துள்ளது.

மாதேல்கமுவ, நெதகமுவ, பத்தடுவன, நில்பனகொட, ஹொரம்பெல, உடுகம்பொல, மெதகம்பிட்டிய தெவொலபொல, வோகொச்சிய, மாரபொல, யட்டியான, கொரச, வீதியவத்த, அஸ்கிரிய, கல்ஒலுவ ஆகிய பிரதேசங்கள் அதிக ஆபத்துள்ள கிராமங்களாக அறிவிக்கப்பட்டுள்ளன. (6)

# சட்டவிரோத செயற்பாடுகளுக்கு இடமளிக்கப் போவதில்லை
## இராஜாங்க அமைச்சர் லொஹான்



(கொழும்பு)

மகாவலி அதிகார சபைக்கு சொந்தமான காணியில் எந்தவொரு சட்டவிரோத செயற்பாடுகளுக்கும் இடமளிக்கப்படமாட்டாது என பெருந்தோட்டக் கைத்தொழில் மற்றும் மகாவலி அபிவிருத்தி இராஜாங்க அமைச்சர் லொஹான் ரத்வத்த தெரிவித்துள்ளார்.

நிலையான நாட்டிற்கு ஒரு வழி என்ற தொனிப்பொருளில் நேற்று முன்தினம் ஜனாதிபதி ஊடக மையத்தில் நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டில் கலந்து கொண்ட இராஜாங்க அமைச்சர் இதனைத் தெரிவித்தார்.

மகாவலி அதிகாரசபைக்கு சொந்தமான காணிகள் தொடர்பான பிரச்சினைகளுக்கு மரபுரிமை வேலைத் திட்டத்தை அமுல்படுத்துவதுடன் ஒரே நேரத்தில் தீர்வு காண்பதில் கவனம் செலுத்தப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.இலங்கை ஒரு விவசாய நாடு. மேலும், மகாவலி அதிகார சபையும் விவசாயத்துறைக்கு பெரும் பங்களிப்பை வழங்கி வருகின்றது.

இவ்விரு அமைச்சுக்களையும் சரியாகப் பயன்படுத்தினால் விவசாயத்தில் நம் நாடு தன்னிறைவு அடையலாம் என தெரிவித்தார். (6)

# ஐவருக்கு சிரேஷ்ட சட்டத்தரணி அந்தஸ்து

(கொழும்பு)

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவினால் இலங்கையில் முதல் முறையாக சிரேஷ்ட சட்டவாதிகள் ஐவருக்கு "சிரேஷ்ட அறிவுறுத்தல் சட்டத்தரணி" அந்தஸ்து வழங்கப்பட்டுள்ளது.

கலாநிதி ஜே.எம். சுவாமிநாதன், டி.எம். சுவாமிநாதன், ஜி.ஜி. அருள் பிரகாசம், எச்.ஆர்.ஏ.டி.பி. குணதிலக மற்றும் எஸ்.என்.எம். குணவர்தன உள்ளிட்டோருக்கே குறித்த அந்தஸ்து வழங்கப்பட்டுள்ளதாக ஜனாதிபதி ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.

சட்டத் தொழிலில் சிறந்து விளங்குகின்றமை மற்றும் உயர்வான பண்புகளை வெளிப்படுத்தும் வகையில் அறிவுறுத்தல் சட்டத்தரணிகள் ஆற்றும் சிறப்பான சேவையைப் பாராட்டும் வகையில், 2023 ஆம் ஆண்டின் 26 ஆம் இலக்கச் சட்டத்தின் பிரகாரம் குறித்த அந்தஸ்து வழங்கப்பட்டுள்ளது. (6)

# இன்று ஒரு தகவல் 113



தென்கச்சி கோ.சுவாமிநாதன்

## ஒப்புக்கொள்ளும் குணம்

விக்கிரம சோழன் - என்று ஒரு ராஜா இருந்தார். அவர் ஒரு நாள் மாறுவேடம் போட்டுக் கொண்டு நகர் சோதனைக்காக புறப்பட்டார். சிறைச்சாலையில் கைதிகள் எல்லாம் எப்படி இருக்கிறார்கள் என்று பார்த்து விட்டு வரலாம் என்று அந்தப் பக்கமாக போனார். பல கைதிகள் அடைக்கப்பட்டு இருந்தார்கள். அதில் ஒரு நபரை அழைத்து நீ ஏன் இந்த இடத்திற்கு வந்து சேர்ந்தாய்? என்று விசாரித்தார் ராஜா.

நான் ஒரு வாடகை வீட்டில் குடியிருந்தேன் அதை காலி செய்யச் சொன்னார்கள். வேறு வீடு கிடைக்கவில்லை. அதனால் காலி செய்யாமல் இருந்தேன். அதற்காக என் பேரில் வழக்கு போட்டு ஒரு வருடம் உள்ளே தள்ளி விட்டார்கள். என்றான் அந்த ஆள்.

ராஜா இன்னொரு கைதியை அழைத்து நீ எப்படி இங்கே வந்தாய் என்று கேட்டார். என் பேர்லையும் எந்த தப்பும் இல்லை. ஒரு நாள் தெருவில் நடந்து சென்று கொண்டிருந்தேன். வழியிலே ஒரு தங்கச் சங்கிலி அநாதையாக கிடந்தது. அதனால் நான் அதை எடுத்தேன். அதை விற்பதற்காக போனேன். அந்த இடத்திலே என்னைப் பிடித்து விட்டார்கள். திருடினேன் என்று சொல்லி தண்டனையும் கொடுத்தார்கள் என்றான் அவன்.

ராஜா அடுத்ததாக இன்னொரு கைதியை அழைத்து விசாரித்தார். ஐயா! எங்க ஊரில் கணக்கு வழக்கு பார்ப்பதற்கு ஒரு ஆள் இருந்தார். அவர் என்னிடம் ஏதாவது காசு வாங்கிக் கொண்டே இருப்பார். நானும் அவ்வப்போது கையில் கிடைத்த ஏதாவது கொடுத்துக் கொண்டு தான் வந்தேன். ஒரு சமயம் கேட்டார் நான் இல்லை என்று சொன்னேன். அவருக்கு கோபம் வந்து விட்டது. அன்றைக்கு இரவு அவரது வீட்டு வைக்கோல் குவியல் பற்றிக் கொண்டு எரிந்தது. அதை நான் தான் கொளுத்தினேன் என்று சொல்லி விட்டார். எல்லோரும் நம்பி விட்டார்கள். அதனால் தான் நான் இங்கு வரவேண்டியதாயிற்று என்றான் அந்த ஆள்.

ராஜா சளைக்கவில்லை! இன்னொரு நபரையும் அழைத்து விசாரித்தார். ஐயா! நான் வேறு ஒன்றும் செய்யவில்லை ஒரு சின்ன கோவில் கட்டலாம் என்று நினைத்து பலபேரிடம் நன்கொடை வாங்கினேன். பணம் கொடுத்தவர்கள் எல்லாம் இன்னொன்றையும் கொடுத்தார்கள். அதாவது என் பேரிலே புகாரையும் கொடுத்து விட்டார்கள். வசூல் செய்த பணத்தை எல்லாம் சாப்பிட்டு விட்டேன் என்று சொல்லி என்னை இங்கே கொண்டு வந்து விட்டார்கள் என்றான் அவன். இப்படி எல்லோருமே நான் ஒரு தப்பையும் செய்யவில்லை என்றும் அநியாயமாக சிறையிலே கொண்டுவந்து அடைத்துவிட்டார்கள் என்றும் சொல்லிக் கொண்டிருந்தார்கள்.

ராஜா கடைசியாக வேறு ஒரு நபரிடம் போனார். நீ என்ன காரணத்திற்காக சிறைச்சாலைக்கு வந்தாய்? என்று கேட்டார். ஐயா! நான் ஒரு ஏழை! ஏழு பிள்ளைகள். வயதான அப்பா அம்மா இருக்கிறார்கள். வேலை செய்தும் போதுமான கூலி கிடைக்கவில்லை. சில சமயங்களில் வேலையும் கிடைப்பதில்லை. பசிக்கொடுமை தாங்கமுடியாமல் செய்யக்கூடாத ஒரு காரியத்தை செய்துவிட்டேன். ஒரு செல்வந்தர் வீட்டிலே திருடி விட்டேன். திருடுவது பெரிய குற்றம்! புத்திகெட்டு போய் அப்படி செய்து விட்டேன். அதனாலே பிடிபட்டேன். நியாயப்படி எனக்கு மூன்று வருடம் சிறை தண்டனை கிடைத்தது. அதனாலே நான் இங்கே வருவதற்கு வேறு யாரும் காரணமில்லை நான் தான் காரணம்! செய்த குற்றத்தை நினைத்து நான் தினமும் அழுது கொண்டு இருக்கின்றேன் என்றான் அந்த ஆள்!

ராஜா உடனே சிறை அதிகாரியை அழைத்தார். அவரும் உடனே வந்து நின்றார். இதோ பாருங்கள் இங்கே வந்திருப்பவர்கள் யாரும் ஒரு குற்றமும் செய்யாதவர்கள். இந்த ஒரு ஆள் மட்டும் தான் குற்றம் செய்துள்ளான். நல்லவர்கள் இருக்கும் இடத்தில் ஒரு பொல்லாதவன் இருக்கக்கூடாது. அதனால் உடனடியாக இவனை விடுதலை செய்து வெளியே அனுப்பி விடுங்கள் என்று உத்தரவு போட்டார். தவறை உணர்ந்தவன் வெளியில் வந்துவிட்டான். குற்றத்தை ஒப்புக்கொள்வது பெரிய குணம். அதற்கு தைரியமும் மனப்பக்குவமும் வேண்டும். இது இரண்டுமே உள்ள ஒருவர் சிறையில் கம்பி எண்ணிக் கொண்டு இருந்தார்.

பக்கத்திலே இருந்தவர் ஏன் அண்ணே நீங்க தான் வெளிப்படையாக பேசுறீங்களே! உங்களுக்கு ஏன் இந்த நிலைமை? என்று கேட்டார். அதுக்கு அவர் சொன்னார். தம்பி நான் எந்தப் பாவமும் செய்யவில்லை. ஒரு நாள் எனக்கு செலவுக்கு 5000 ரூபாய் தேவை ப்பட்டது. அதற்காக வேறு ஒன்றும் செய்யவில்லை. வீட்டில் இருந்து தான் அதை எடுத்தேன். அது பெரிய தப்பு என்று சொல்லி சிறையில் அடைத்து விட்டார்கள் என்றான். நம்ம சொந்த செலவிற்கு வீட்டில் இருந்து பணம் எடுப்பது தவறா? என்று கேட்டார் அவர். ஆமாம் அப்படி தான் சொல்லுகிறது சட்டம்! ஏன் என்றால் நான் பணம் எடுத்தது என்னுடைய வீட்டில் இருந்து அல்ல! எதிர் வீட்டில் இருந்து என்றார் அவர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெற்றி வாகை சூடியது அல்வாய் மனோகரா அணி



(யாழ்ப்பாணம்)

கரவெட்டி பிரதேச செயலக வலைப்பந்தாட்ட போட்டியில் அல்வாய் மனோகரா அணி சம்பியன் கிண்ணத்தை சுவீகரித்துக் கொண்டது.

கரவெட்டி பிரதேச செயலகத்திற்கு உட்பட்ட பதிவு செய்யப்பட்ட கழகங்களுக்கு இடையிலான பெண்களுக்கான வலைப்பந்தாட்ட போட்டி வதிரி டைமன்ஸ் விளையாட்டுக் கழக மைதானத்தில் கடந்த புதன் கிழமை நடைபெற்றது.

இதன் இறுதியாட்டத்தில் அல்வாய் மனோகரா அணியை எதிர்த்து வதிரி டைமன்ஸ் அணி மோதியது.

ஆட்டம் ஆரம்பம் முதல் இரு அணிகளும் சமபலத்துடன் மோதினர். இருப்பினும் ஆட்ட நேர முடிவில் அல்வாய் மனோ கரா அணி 11:7 என்ற புள்ளிகள் வித்தியாசத்தில் வெற்றி பெற்று சம்பியன் கிண்ணத்தை சுவீகரித்துக் கொண்டனர். (நி-6-90)

# விளையாட்டுக் கழகங்களை பதிவு செய்தலும், புதுப்பித்தலும்

(யாழ்ப்பாணம்)

வடமராட்சி உதைபந்தாட்ட சிரேஷ்ட சங்கமானது 40 வயதிற்கு மேற்பட்டோருக்கான உதை பந்தாட்டத்தை மேம்படு த்துவதற்காக உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டிகளை நடத்தி வருகின்றது.

எனவே வடமராட்சி உதைபந்தாட்ட சிரேஷ்ட சங்கத்தில் பதிவு செய்யாத மற்றும் பதிவு செய்த (புதுப்பித்தல்) வடமராட்சி பிரதேசத்திற்குட்பட்ட விளையாட்டுக் கழகங்கள் எதிர் வரும் 10.05.2024 அன்று அல்லது அதற்கு முன்னர் எமது சங்கத்தில் பதிவுகளை மேற்கொள்ளுமாறும் மேலதிக விபரங்களைப் பெற வடமராட்சி உதைபந்தாட்ட சிரேஷ்ட சங்கத்தின் தலைவர் ம.மதிஅழகன் (076 853 1257) செயளாளர் எ.எட்வின் (077 728 6315) ஆகியோருடன் தொடர்பு கொள்ள முடியும். (6)


## சிவபூமி அறக்கட்டளை கோண்டாவில்

## வேலைவாய்ப்பு

முகாமைத்துவ உதவியாளர்
விவசாய மேற்பார்வையாளர்
அலுவலக உதவியாளர்

குறித்த பதவிகளுக்கான தங்கள் சுயவிபரங்களுடன் விண்ணப்பிக்கவும்

விண்ணப்பம் அனுப்ப வேண்டிய முகவரி

சிவபூமி அறக்கட்டளை, கோண்டாவில் கிழக்கு, கோண்டாவில், யாழ்ப்பாணம்.

தொலைபேசி -021 222 7938
மின்னஞ்சல்- Sivapoomi@gmail.com

(642)


# கராத்தே கலைக் கண்காட்சி



(முறிகண்டி)

கிளிநொச்சி மகாவித்தியாலயத்தின் மெய்வல்லுனர் திறனாய்வுப் போட்டி நேற்று முன் தினம் பாடசாலை மைதானத்தில் இடம் பெற்றது.

பாடசாலை முதல்வர் இளவேந்தி தலைமையில் இடம் பெற்ற போட்டி நிகழ்வில் கரைச்சி பிரதேச செயலாளர் ரி.முகுந்தன் பிரதம அதிதியாக கலந்து கொண்டார். குறித்த நிகழ்வில் வெற்றி பெற்ற மாணவர்களிற்கு சான்றிதழ்களும் வழங்கி வைக்கப்பட்டது.

இதன்போது இடம்பெற்ற இடைவேளை நிகழ்வில் குறித்த பாடசாலை மாணவர்களால் கராத்தே கலைக் கண்காட்சியும் இடம் பெற்றது. இதன்போது, கராத்தே தற்காப்பு கலை மூலம் நிகழ்வில் அசத்திய மாணவர்களை பலரும் பாராட்டியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (6-100)

## facebook. (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 3107

நஸ்ரியா




கவி




தருசா




சாத்விக்




யுவன்




மிதுன்




நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயருடன் facebook பகுதியில் பிரசுரமாகும்.


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org



கல்கியின் பாகம் - 2

# பொன்னியின் செல்வன்

காவியத் தொடர் 472



அவர்கள் இச்சமயம் எங்கே இருப்பார்கள்? என்ன செய்து கொண்டிருப்பார்கள்? என்ன எண்ணிக் கொண்டிருப்பார்கள்?

உண்மையிலேயே அபாயம் சூழ்ந்த நிலையில் நாம் விட்டுவிட்டு வந்த வந்தியத்தேவனிடம் இப்போது நாம் செல்வோம். இளவரசரைச் சிறைப்பிடித்துக் கொண்டு போவதற்காக வந்த பெரிய மரக்கலத்தின் அடித்தட்டில், தட்டு முட்டுச் சாமான்களும், மரக் கட்டைகளும், மூட்டை முடிச்சுகளும், போட்டிருந்த இருண்ட அறையில், அவன் ஒரு கட்டையுடன் சேர்த்துக் கட்டப்பட்டுக் கிடந்தான். வெகு நேரம் வரையில் அவன் பிரமை பிடித்தவன் போலிருந்தான். அவசர புத்தியினால் இத்தகைய இக்கட்டில் அகப்பட்டுக் கொண்டோமே என்ற எண்ணம் அவனைவதைத்தது. இது என்ன கப்பல், யாருடைய கப்பல், இதில் சில முரட்டு அராபியர்களும் மந்திரவாதி ரவிதாஸனும் சேர்ந்திருப்பது எப்படி, இந்தக் கப்பல் எங்கே போகிறது, தன்னை என்னதான் செய்வார்கள் என்று யோசித்துப் பார்த்ததும் அவனுக்கு ஒன்றும் புரியவில்லை. அவன் தன் வருங்காலத்தைப் பற்றிக் கண்டு வந்த கனவெல்லாம் உண்மையில் கனவுதான் போலும்! இதைவிடப் பெரிய கஷ்டங்களிலிருந்தெல்லாம் தான் தப்பித்திருக்கும் போது, இதிலிருந்து தப்பிக்கவும் ஒருவழி கிடைக்காமலா போகும் என்ற சபலமும் சில சமயம் ஏற்பட்டது. பார்க்கலாம் உடம்பில் உயிர் இருக்கும் வரையில், அறிவும் ஆலோசனைத் திறனும் இருக்கும் வரையில், அடியோடு நம்பிக்கை இழக்க வேண்டியதில்லை.

இந்த ஆசை தோன்றிய பிறகு சுற்றுமுற்றும் பார்த்தான். இருட்டில் முதலில் கண் தெரியவில்லை. வரவரத் தெரியலாயிற்று. அவனுக்குச் சமீபத்திலேயே பல வகை ஆயுதங்கள் குவிந்து கிடப்பதைக் கண்டான். அவனுடைய உடம்பு இறுக்கிக் கட்டப்பட்டிருந்ததே தவிர, கைகள் இறுக்கிக் கட்டப்படவில்லை. கைக்கட்டைத் தளர்த்திக்கொண்டு ஒரு கையை நீட்டி அங்கே கிடந்த கத்திகளில் ஒன்றை எடுக்கலாம் உடம்பையும் கால்களையும் பிணைந்திருந்த கயிறுகளையும் அறுத்து விடலாம். ஆனால் பிறகு என்ன செய்வது? இந்த அறைக் கதவோ சாத்தப்பட்டிருக்கிறது. இதிலிருந்து வெளியில் போவது எப்படி? போன பிறகு அவ்வளவு அராபியர்களுடன் மந்திரவாதியுடனும், அவன் தோழனுடனும் சேர்ந்தாற்போல் சண்டை போடமுடியுமா? அப்படிச் சண்டை போட்டு எல்லாரையும் கொன்றுவிட்டாலும் அப்புறம் என்ன பண்ணுவது? கப்பலைத் தன்னந்தனியாகத் தன்னால் செலுத்த முடியுமா? கப்பலைப் பற்றிய சமாசாரம் ஒன்றுமே தனக்குத் தெரியாதே!

ஆம் மறுபடியும் அவசரப் படக்கூடாது பொறுத்திருந்து பார்க்கவேண்டும். தன்னை உடனே கொல்ல முயலாமல் அவர்கள் கட்டிப் போட்டிருப்பதே கொஞ்சம் நம்பிக்கை இடமளிக்கிறதல்லவா? என்னதான் செய்யப் போகிறார்கள், பார்க்கலாமே?

ஆனால் நேரமாக ஆக வந்தியத்தேவனுடைய பொறுமை பெரிதும் சோதனைக் கிடமாயிற்று. அடுப்புக்குள்போட்டு அவனை வேகவைப்பது போல் அந்த அறை அவ்வளவு புழுக்கமாயிருந்தது. உடம்பில் வியர்வை வியர்த்துக் கொட்டியது. கடற் பிரயாணம் இவ்வளவு வெதுப்புவதாயிருக்கும் என்று அவன் கனவிலும் எண்ணியதில்லை. பூங்குழலியுடன் அன்றிரவு படகில் சென்றதை நினைத்துக் கொண்டான். அப்போது எப்படிக் குளிர் காற்று வீசிற்று? உடம்புக்கு எவ்வளவு இதயமாயிருந்தது. அதற்கும் இதற்கும் எத்தனை வித்தியாசம்? சுண்ணாம்புக்காளவாயில் போடுவது என்பார்களே, அதுபோல அல்லவா இருக்கிறது? திடீரென்று ஏதோ ஒரு மாறுதலை அவன் உணர்ந்தான். ஆம், கப்பலில் ஆட்டம் நின்றுவிட்டது.

(தொடரும்...)

# சிறுவர் அரங்கம்

## கிழவர் கேட்ட கேள்வி!

(நேற்றைய தொடர்ச்சி)

திடுக்கிட்டனர் நடுவர்கள். முதியவர் ஈழத்து நங்கையின் இசையையும், பாண பத்திரரின் மனைவி இசைத்த இசை இரண்டிற்கும் உள்ள சிறப்புகளையும், குறைகளையும் புட்டு புட்டு வைத்தார்.

"பாணபத்திரரின் மனைவி இத்தனை சிறப்பாக இசைக்க, அவரை எப்படி தோற்றவர் என்று சொன்னீர்கள்?" என்றார் முதியவர்.



மன்னரின் முகத்தை பார்த்தனர் நடுவர்கள். "நீங்கள் எல்லாம் என்ன நடுவர்கள். மனச்சாட்சி படி தீர்ப்பு வழங்காமல் பொய் தீர்ப்பு அளிக்கிறீர்களே...? இது எந்த விதத்தில் நியாயம்?" என்றார் முதியவர்.

"நடுவர்களே... இசைக்கும், இறைவனுக்கும் சம்மந்தம் உண்டு. இசைக்கு அநீதி செய்வதன் மூலம் இறைவனையே அவமதிக்கிறீர்கள். இசைப்பட வாழ்ந்த பாண்டிய மன்னர்கள் எங்கே? வசைபட வாழ்ந்து முன்னோர் பெயருக்கு அவப் பெயரை கொண்டு வரும் இந்தப் பாண்டியன் எங்கே? என்றார் கிழவர்.

கடும் சினம் கொண்ட மன்னன், என்னையே குற்றம் சாட்டும் அளவிற்கு உங்களுக்கு என்ன துணிச்சல்? பிடித்து இந்தக் கிழவரை கட்டுங்கள், என்றான்.

கிழவரைத் தொட்ட காவலர்கள் மின்சாரத்தை தொட்டது போல் கீழே விழுந்தனர்.

மறுநிமிடம் கிழவரைக் காணவில்லை. கோயில் கிடுகிடு வென நடுங்கியது. அனைவரும் திடுக்கிட்டனர்.

கிழவர் இருந்த இடத்தில் இறைவன் காட்சியளித்து மறைந்தார்.

அதிர்ச்சியடைந்த ராசராசன் தரையில் விழுந்தான். தன் தவறை மன்னிக்கும்படி வேண்டினான்.

"நீதி தவறி செயல்பட்ட நான் இனி அரியணையில் அமருவதற்கு தகுதி இல்லை. இந்தக்கணமே நான் அரச வாழ்வை துறந்து ஆன்மீக வாழ்விற்குச் செல்கிறேன்!" என்றான்.தன் மகனிடம் அரச பொறுப்பை ஒப்படைத்துவிட்டு ஆன்மீகத்தில் ஈடுபட்டான் மன்னன்.

(முற்றும்.)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதவி பற்றி பேசுவோர் அதிகம்;
அதைச் செய்வோர் மிகக் குறைவு.
– டெனிகஸான்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## எரிக் சொல்ஹெய்ம் நேர்மையான தூதுவரல்ல

எரிக் சொல்ஹெய்ம், இலங்கை மக்கள் நன்கு அறிந்த பெயர். இலங்கை அரசாங்கத்துக்கும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்குமிடையில் சமாதானப் பேச்சுவார்த்தை நடந்தபோது நோர்வேயின் சமாதானத் தூதுவராகச் செயற்பட்டவர்.

எரிக் சொல்ஹெய்மின் சமாதான முயற்சி வெற்றி தரும் எனப் பலரும் எதிர்பார்த்திருந்தனர்.

ஆனால் அவரின் சமாதான முயற்சிகள் தோல்வியில் முடிந்து போயின.

தவிர, 2009ஆம் ஆண்டு வன்னிப் பெருநிலப்பரப்பில் இறுதி யுத்தம் நடைபெற்றபோது, அக்கொடும் போரை நிறுத்துவதில் எரிக் சொல்ஹெய்ம் இம்மியும் முயற்சி செய்தாரில்லை.

நிலைமை இதுவாக இருக்கையில், தனது சமாதான முயற்சிகள் பற்றி எரிக் சொல்ஹெய்ம் இடைசுகம் கருத்துத் தெரிவித்து வந்தார்.

அவரின் கருத்துக்கள் அவரின் உரிமை என்ற அடிப்படையில் அது தொடர்பில் நம்மவர்கள் எவரும் எதிர்வினையாற்றவில்லை.

இருந்தும் ஜனாதிபதியாக இருந்த கோட்டாபய ராஜபக்ஷவை மக்கள் நாட்டை விட்டுத் துரத்திய பின்னர், ரணில் விக்கிரமசிங்க ஜனாதிபதிப் பதவியைப் பொறுப்பேற்றுக் கொண்டார்.

அவர் ஜனாதிபதியாகப் பதவியேற்றதும் எரிக் சொல்ஹெய்மை சர்வதேச காலநிலை ஆலோசகராக நியமித்தார்.

எரிக் சொல்ஹெய்மை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தனது ஆலோசகராக நியமித்தபோது, எரிக் சொல்ஹெய்ம் நேர்மையானவரா? என்ற கேள்வி எழுந்தது.

அந்த நேரத்தில் இதே இடத்தில், ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க வழங்கிய சர்வதேச காலநிலை ஆலோசகர் பதவியை எரிக் சொல்ஹெய்ம் பொறுப்பேற்கக் கூடாது.

அவ்வாறு பொறுப்பேற்றால், அது அவர் தமிழ் மக்களுக்குச் செய்கின்ற அநீதி என்றும் அவ்வாறு அவர் ஆலோசகர் பதவியை ஏற்பாராயின் அவர் மீதான தமிழ் மக்களின் பார்வை வேறு கோணத்தில் அமையும் என்றும் குறிப்பிட்டிருந்தோம்.

இருந்தும் எரிக் சொல்ஹெய்ம் ஒரு நடுநிலை கொண்ட சமாதானத் தூதுவராகத் தம்மை அடையாளப்படுத்தத் தவறினார்.

சரி, ஏதோ அவரவர் மனநிலை என நாம் அமைதி கொண்டோம்.

ஆனால் கடந்த ஒரு சில தினங்களுக்கு முன்னதாக யாழ்ப்பாணத்துக்கு வருகை தந்த எரிக் சொல்ஹெய்ம் மண்டைதீவுக்குச் சென்று அங்குள்ள கண்டல் தாவரம் தொடர்பான ஆய்வுகளை மேற்கொண்டிருந்தார்.

பரவாயில்லை. அது அவரின் கடமை என்பதாக அவரின் யாழ்ப்பாண விஜயத்தை விட்டிருக்கலாம்.

ஆனால் அவர் தமிழ் மக்களின் அபிலாசைகள் இன்னமும் பூர்த்தி செய்யப்படவில்லை எனக் கூறியுள்ளார்.

இவ்வாறு அவர் கூறியது தமிழ் மக்களைத் திருப்திப்படுத்துவதற்காக இருக்கலாம்.

ஆனால் அவர் ஒரு நேர்மையான சமாதானத் தூதுவர் அல்ல என்ற நிலைப்பாட்டுக்குத் தமிழ் மக்கள் வந்துவிட்ட பின்னர், அவர் நம் தொடர்பில் கூறுவதை ஒரு நரித் தந்திரமாகவே நாம் பார்க்க முடியும்.

# ராஜபக்ஷக்களை முன்னிலைப்படுத்தியுள்ள பெரமுனவுக்கு அரசியல் எதிர்காலம் இல்லை

## பாட்டலி சம்பிக்க ரணவக்க தெரிவிப்பு

பொருளாதார படுகொலையாளிகள் என்று உயர் நீதிமன்றத்தால் அறிவிக்கப்பட்ட ராஜபக்ஷக்களை முன்னிலைப்படுத்தியுள்ள ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவுக்கு அரசியல் எதிர்காலம் என்பதொன்று கிடையாது. இடம்பெறவுள்ள தேர்தல்களில் பொதுஜன பெரமுனவுக்கும், ராஜபக்ஷக்களுக்கும் மக்கள் தகுந்த பாடத்தை கற்பிப்பார்கள் என ஐக்கிய குடியரசு முன்னணியின் தலைவரும், பாராளுமன்ற உறுப்பினருமான பாட்டலி சம்பிக்க ரணவக்க தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று வெள்ளிக்கிழமை (03) இடம்பெற்ற நிகழ்வில் கலந்துக் கொண்டதன் பின்னர் ஊடகங்களுக்கு கருத்துரைக்கையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் கூறியதாவது,

மே தினக் கூட்டத்தில் எமது பலத்தை மீண்டும் உறுதிப்படுத்தியுள்ளோம் என்று ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவினரும், ராஜபக்ஷக்களும் குறிப்பிடுவது நகைப்புக்குரியது. 2022 ஆம் ஆண்டு காலப் பகுதிகளில் மக்கள் போராட்டம் பலம் பெற்றதையும், ராஜபக்ஷக்கள் பதவிகளை விட்டு தப்பிச் சென்றதையும் மறந்து விட்டார்கள்.

பொருளாதார படுகொலையாளிகள் என்று உயர் நீதிமன்றத்தால் அறிவிக்கப்பட்ட ராஜபக்ஷக்களை முன்னிலைப்படுத்தியுள்ள ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவுக்கு அரசியல் எதிர்காலம் என்பதொன்று கிடையாது. இடம்பெறவுள்ள ஜனாதிபதி மற்றும் பொதுத்தேர்தல்களில் ராஜபக்ஷக்களுக்கும், பொதுஜன பெரமுனவுக்கும் நாட்டு மக்கள் தகுந்த பாடம் புகட்டுவார்கள்.

இடம்பெறவுள்ள ஜனாதிபதித் தேர்தல் தீர்மானமிக்கது. பொதுஜன பெரமுனவின் சார்பில் தேர்தலில் போட்டியிட எவருமில்லை. ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை முன்னிலைப்படுத்திக் கொண்டு ஜனாதிபதித் தேர்தலில் செல்வாக்கு பெறலாம் என்ற நிலைப்பாட்டில் இருந்துகொண்டு ராஜபக்ஷக்கள் செயற்படுகிறார்கள்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மீது நாட்டு மக்களுக்கு நன்மதிப்பு உள்ளது. ராஜபக்ஷக்களுடன் கூட்டணியமைத்து மக்களின் வெறுப்பை ஜனாதிபதி பெற்றுக் கொள்ள கூடாது. ராஜபக்ஷக்களிடமிருந்து விலகி செயற்படுவது ஜனாதிபதியின் அரசியலுக்கு சிறந்ததாக அமையும் என்றார். (ம-7,10)

## மே மாதம் நடுப்பகுதி வரை வெப்ப காலநிலை நீடிக்கும்

மனித உடலில் உணரப்படும் வெப்பநிலை அடுத்த இரண்டு வாரங்களுக்கு அதிகமாக இருக்கும் என வளிமண்டலவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

மே மாதம் இரண்டாவது வாரத்தில் தென்மேற்கு காற்று நீரோட்டங்கள் உருவாகும் என்று எதிர்பார்க்கப்படுகிறது என்று மூத்த வானிலை ஆய்வாளர் சமிந்த டி சில்வா கூறினார்.

எதிர்வரும் 14 நாட்களுக்கு பொதுமக்கள் அவதானத்துடன் செயற்படுமாறும் அனைத்து சுகாதார ஆலோசனைகளையும் பெற்றுகொள்ளுமாறு அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை சப்ரகமுவ, மேல், வடமேல் மற்றும் தென் மாகாணங்களிலும் அத்துடன் அம்பாறை மற்றும் மொனராகலை மாவட்டங்களிலும் அதிகரித்த வெப்பநிலை காணப்படுமென தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-7,10)

## அக்கரைப்பற்றில் விபத்து 25 மாணவர்கள் உட்பட 33 பேர் காயமடைந்தனர்

அக்கரைப்பற்று - அம்பாறை பிரதான வீதியில் இடம்பெற்ற வாகன விபத்தில் 25 பாடசாலை மாணவர்கள் உட்பட 33 பேர் காயமடைந்துள்ளனர்.

சிசுசெரிய பேருந்தும் இலங்கை போக்குவரத்து சபைக்குச் சொந்தமான பேருந்தும் நேருக்கு நேர் மோதியதில் இந்த விபத்து நேர்ந்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இந்த விபத்தில் காயமடைந்தவர்கள் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இரண்டு பேருந்துகளின் சாரதிகளும் படுகாயமடைந்துள்ள நிலையில், அவர்களின் நிலைமை கவலைக்கிடமாக உள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

சம்பவம் தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (ம-7,10)

## ஐக்கிய அரபு இராச்சியத்தில் 44 இலங்கையர்களுக்கு அரச பொதுமன்னிப்பு

(கொழும்பு)

பல்வேறு குற்றங்களுக்காக ஐக்கிய அரபு இராச்சியத்தில் சிறையில் உள்ள 44 இலங்கையர்களுக்கு அரச மன்னிப்பு வழங்கப்பட்டதாக வெளிவிவகார அமைச்சு அறிவித்துள்ளது.

ஏப்ரல் மாதம் ரம்ழான் மாதத்திற்கான அரச மன்னிப்பு வழங்கப்பட்டதாக [illegible] உள்ள இல[illegible] அறிவித்துள்ளது.

இலங்கையர்களை எதிர்வரும் நாட்களில் பாதுகாப்பாக இலங்கைக்கு அனுப்ப அந்நாட்டு அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ளதாகவும் அபுதாபியில் உள்ள இலங்கை தூதரகம் அந்நாட்டு அதிகாரிகளை ஒருங்கிணைக்கும் என்றும் வெளிவிவகார அமைச்சு தெரிவித்துள்ளது. (ம-7,10)

## மோ.சைக்கிள் விபத்து மாணவன் உயிரிழப்பு

குருநாகலை கல்கமுவ பிரதேசத்தில் 3 பாடசாலை மாணவர்கள் பயணித்த மோட்டார் சைக்கிள் விபத்துக்குள்ளானதில் ஒரு மாணவன் உயிரிழந்துள்ளார்.

கல்கமுவ பகுதியின் புனரமைக்கப்பட்ட ரயில் பாதையின் அருகில் உள்ள வீதியில் சென்றுகொண்டிருந்தபோதே இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

இந்நிலையில், காயமடைந்த மற்றைய இரு மாணவர்களும் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதுடன் அதில் ஒருவர் மேலதிக சிகிச்சைக்காக குருநாகல் போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளார்.

அத்துடன், சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ம-7,10)

## பட்டமளிப்பு விழா

(தன்னாமுனை)

ஆறுதல் நிறுவனத்தால் நடாத்தப்படும் முன்பள்ளி கல்வி டிப்ளோமா கற்கை நெறியில் 2019 - 2020 கல்வியாண்டில் சித்தியடைந்த கிழக்கு மாகாண ஆசிரியர்களுக்கான பட்டமளிப்பு விழாவானது இன்று சனிக்கிழமை காலை 9.00 மணிக்கு, மட்டக்களப்பு தன்னாமுனையில் அமைந்துள்ள மியானி அரங்கில் ஆறுதல் நிறுவன பிரதம நிறைவேற்றுப் பணிப்பாளர் ஜெயா தம்பையா தலைமையில் இடம்பெறவுள்ளது.

இந் நிகழ்வின் சிறப்பு விருந்தினராக மாகாணக் கல்விப் பணிப்பாளர் திருமதி எஸ்.குலேந்திரகுமார் அவர்கள் கலந்து சிறப்பிக்கவுள்ளார். (ம-7,10)


## வண்ணை கதிரேசனின் அலங்கார திருவிழா

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் வண்ணை நகர் ஸ்ரீ செந்தில் கதிர்வேலாயுத சுவாமி (கதிரேசன் கோவில்) ஆலய வருடாந்த அலங்கார திருவிழாவானது எதிர்வரும் 8 ஆம் திகதி புதன்கிழமை ஆரம்பமாகவுள்ளதோடு, தொடர்ந்து பதினொரு தினங்கள் பக்திபூர்வமாக இடம்பெறும் இத் திருவிழா தனில் எதிர்வரும் 21 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை தேர்த்திருவிழாவும் மறு நாள் புதன்கிழமை தீர்த்தத் திருவிழாவும் இடம்பெறவுள்ளது. (ம-7,10)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புகையிரதப் படிக்கட்டுக்களில் நின்றபடி பயணிக்க தடை



(கொழும்பு)

புகையிரதப் படிக்கட்டுகளில் நின்றபடி பயணிப்பது தடை செய்யப்பட்டுள்ளதாக புகையிரதத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

உள்ளூர் மற்றும் வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகள் குறிப்பாக மலையகத்திற்கும் செல்லும் புகையிரதங்களின் படிக்கட்டுகளில் நின்றபடி பயணிப்பதால் பல விபத்துச் சம்பவங்கள் பதிவாகியுள்ளன.

பிரச்சினைக்கு தீர்வு காண பயணிகள் புகையிரதங்களின் படிக்கட்டுகளில் நின்றபடி பயணிப்பதை தடுக்க நடவடிக்கை எடுக்குமாறு புகையிரத அதிகாரிகளுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது. (6)

# வலுவூட்டல் திறன்விருத்தி பயிற்சிப் பட்டறை

(சாவகச்சேரி)

மக்கள் மன்றங்களின் நிறுவனமயமாக்கல் செயற்பாட்டில் ஆவணங்களின் முக்கியத்துவம் தொடர்பான வலுவூட்டல் திறன் விருத்திப் பயிற்சிப் பட்டறை கடந்த செவ்வாய்க்கிழமை யாழ்ப்பாணம் புங்கங்குளம் சந்திப் பகுதியில் உள்ள தனியார் விருந்தினர் விடுதியில் இடம் பெற்றது.

கிறிசலிஸ் நிறுவனத்தின் ஏற்பாட்டில் பிரிஜ் திட்டத்தின் கீழ் ஏற்பாடு செய்யப்பட்ட மேற்படி செயலமர்வில் வளவாளராக முதன்மை பயிற்றுவிப்பாளர் அன்னலிங்கம் சுதர்சன் கலந்து கொண்டு ஆவணங்களின் முக்கியத்துவம் தொடர்பான பயிற்சி நெறியை வழங்கியிருந்தார்.

கிறிசலிஸ் நிறுவன திட்ட இணைப்பாளர் டோல்ரன் பிரகாஷ் தலைமையில் இடம் பெற்ற மேற்படி பயிற்சிநெறியில் யாழ். மாவட்ட குடிசார் அமைப்புக்களின் சம்மேளனம் மற்றும் உள்ளூராட்சி மன்ற பெண் பிரதிநிதிகளின் சம்மேளன உறுப்பினர்கள் ஆகியோர் கலந்து கொண்டிருந்தனர். (6-30)

# 130 பேருக்கு எதிரான வழக்கு யூலை மாதம் தவணையிடப்பட்டுள்ளது

(நெளுக்குளம்)

கரியல்வயல், சுண்டிக்குளம் பகுதிகளை அண்மித்துள்ள மக்கள் 130 நபர்களுக்கு எதிராக வனஜீவராசிகள் திணைக்களத்தினரால் தொடுக்கப்பட்ட வழக்கு நேற்று முன்தினம் முல்லைத்தீவு நீதிமன்றில் எடுத்துக் கொள்ளப்பட்டது.

1908 ஆம் ஆண்டு தொடக்கம் மக்கள் பயிர் செய்து வாழ்ந்து வரும் நிலையில் குறித்த இடத்தில் உள்ள மக்கள் தம் காணிகளை துப்பரவு செய்தமையை அடுத்து வனஜீவராசிகள் திணைக்களத்தினர் அது தமக்குரிய காணி என முல்லைத்தீவு நீதிமன்றில் வழக்கு தாக்கல் செய்திருந்தனர்.

சுண்டிக்குளம் தேசிய பூங்காவிற்குள் உட்சென்றமை, தாவரங்களை வெட்டி வெளியாக்கியமை, காணிகளை வெளியாக்கியமை, பாதைகளை அமைத்தல் மற்றும் பாதைகளை பயன்படுத்தியமை போன்ற காரணங்களை முன்வைத்து குறித்த வழக்கு பதிவு செய்யப்பட்டிருந்தது.

குறித்த வழக்கானது கடந்த வருடம் 7.12.2023 இடம்பெற்று நேற்று முன்தினம் தவணையிடப்பட்டிருந்தது.

இதற்கமைய குறித்த வழக்கானது விசாரணைக்காக முல்லைத்தீவு நீதிவான் நீதிமன்றில் எடுத்துக்கொள்ளப்பட்டது.

குறித்த வழக்கானது மூன்றாக பிரித்து எதிர்வரும் யூலை மாதம் 19, 25, 26 ஆம் திகதிகளுக்கும் தவணையிடப்பட்டுள்ளது. (6-299)

# நூல் வெளியீடு

(யாழ்ப்பாணம்)

க.பரணீதரன் எழுதிய ஜீவநதியின் எஸ்.சிவலிங்கராஜா சிறப்பிதழ் வெளியீட்டு விழாவானது நாளை மாலை 3.30 மணிக்கு திருநெல்வேலி 37, இராமநாதன் வீதியில் அமைந்துள்ள ராஜா கிறீம் ஹவுஸ் சரஸ்வதி மண்டபத்தில் கவிஞர் சோ.பத்மநாதன் தலைமையில் இடம் பெறவுள்ளது. (6)

# கடற்பரப்பில் கைதான 3 இந்திய மீனவர்கள் விடுதலை

(யாழ்ப்பாணம்)

இலங்கை கடற்பரப்பில் அத்துமீறி மீன் பிடித்த குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டிருந்த மூன்று இந்திய மீனவர்கள் யாழ். மேல் நீதிமன்றத்தின் உத்தரவின் பேரில் ஊர்காவற்றுறை நீதிவான் நீதிமன்றத்தினால் மூவரும் நேற்று விடுதலை செய்யப்பட்டுள்ளனர்.

கடந்த பெப்ரவரி மாதத்தின் இரு வேறு தினங்களில் கைது செய்யப்பட்டிருந்த குறித்த மீனவர்கள், 6 மாத கால சிறைத் தண்டனை விதிக்கப்பட்டு வெலிக்கடை சிறைச்சாலையில் விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்தனர். இந்த வழக்கு தொடர்பில் இந்திய அரசினால் யாழ். மேல் நீதிமன்றத்தில் மேன்முறையீடு செய்யப்பட்ட நிலையில், அவர்கள் விசைப்படகோட்டிகள் என்பதற்கு எவ்வித ஆதாரமும் இல்லையென்பதால் நல்லிணக்க அடிப்படையில் 6 மாத சிறைத் தண்டனையை இரத்து செய்து யாழ். மேல் நீதிமன்றம் கடந்த வாரம் உத்தரவிட்டது.

இதற்கிணங்க மூன்று இந்திய மீனவர்களும் ஊர்காவற்றுறை நீதிவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டனர்.

இதன்போது, யாழ். மேல் நீதிமன்றத்தினால் பிறப்பிக்கப்பட்ட கட்டளையும் வாசிக்கப்பட்டது. இதனை தொடர்ந்து மூவரையும் விடுதலை செய்யுமாறு ஊர்காவற்றுறை நீதிவான் நளினி சுபாகரன் உத்தரவிட்டுள்ளார். (6)

# சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | நெல்லியடி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 140 | 100 | 100 | 100-140 | 120 |
| உருளைக்கிழங்கு | 160 | 200 | 200 | 160 | 200 |
| பச்சைமிளகாய் | 200 | 80 | 60 | 70-80 | 120 |
| தக்காளி | 160 | 120 | 100 | 100-140 | 160 |
| மரவள்ளிக்கிழங்கு | 100 | 130 | 120 | 100 | 150 |
| கோவா | 100 | 160 | 150 | 150 | 200 |
| கரட் | 100 | 240 | 200 | 200 | 250 |
| பூசணி | 100 | 120 | 140 | 80 | 100 |
| புடோல் | 100 | 200 | 200 | 100 | 120 |
| வாழைக்காய் | 120 | 100 | 100 | 80 | 120 |
| சின்ன வெங்காயம் | 280 | 320 | 120 | 200-350 | 400 |
| பெரிய வெங்காயம் | 350 | 250 | 350 | 200 | 300 |
| பாகற்காய் | 600 | 250 | 300 | 200 | 400 |
| வெண்டக்காய் | 100 | 120 | 150 | 150 | 160 |
| கருணைக் கிழங்கு | 100 | 140 | 100 | — | 200 |
| பயற்றங்காய் | 160 | 200 | 180 | 200 | 120 |
| லீக்ஸ் | 250 | 250 | 220 | 200 | 250 |
| பீற்றூட் | 160 | 150 | 150 | 200 | 300 |
| கறிமிளகாய் | 300 | 150 | 150 | 200 | 200 |
| முருங்கைக்காய் | 800 | 800 | 800 | 300-600 | 600 |
| போஞ்சி | 250 | 320 | 300 | 220 | 400 |
| கத்தரிதம்புள்ள | 100 | 80 | 80 | — | 100 |
| கீரை - 1 பிடி | 100 | 100 | 100 | 40-60 | 120 |
| தேசிக்காய் | 1000 | 800 | 800 | 600-900 | 800 |
| தேங்காய் (ஒன்று) | 80 | 110 | 100 | 50-100 | 80-120 |
| இராசவள்ளி | 350 | 450 | 400 | 250 | 400 |
| வெங்காயப்பூ | 300 | 400 | 400 | — | 400 |
| முள்ளங்கி | 80 | 100 | 100 | 80 | 200 |
| பொன்னாங்காணி | 80 | 60 | 60 | 100 | 60 |
| வல்லாரை | 60 | 200 | 40 | 80 | 80 |
| ஈரப்பலா | 80 | — | — | 80 | |

# சர்வதேச ஊடக சுதந்திர தினத்தை முன்னிட்டு யாழில் போராட்டம்



(யாழ்ப்பாணம்)

சர்வதேச ஊடக சுதந்திர தினத்தை முன்னிட்டு, யாழ்ப்பாணத்தில் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

யாழ். ஊடக அமையத்தின் முன்பாக நேற்று வெள்ளிக்கிழமை மாலை 3 மணியளவில் யாழ். ஊடக அமையத்தின் ஏற்பாட்டில் குறித்த போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

யாழைச் சேர்ந்த ஊடகவியலாளர் போராட்டத்தில் கலந்து கொண்டு, படுகொலை செய்யப்பட்ட ஊடகவியலாளர்களுக்கு நீதி கோரி கோசங்களை எழுப்பினர். அத்துடன் ஊடக நிறுவனங்கள் மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதல் சம்பவங்கள் தொடர்பில் விசாரணைகளை முன்னெடுக்க வேண்டும் எனவும் கோரினர்.

அத்துடன் அரச அதிகாரிகள், அரச பலங்களை பிரயோகித்து ஊடகவியலாளர்களை நெருக்கடிக்கு உள்ளாக்கி, அச்சுறுத்துவது உள்ளிட்ட செயற்பாடுகளை நிறுத்த வேண்டும் எனவும் ஊடக சுதந்திரம் பாதுகாக்கப்பட வேண்டும் எனவும் போராட்டத்தில் ஈடுபட்ட ஊடகவியலாளர்கள் கோரிக்கை விடுத்தனர். (6-33)

# தாக்குதலுக்கு உள்ளான நபர் மருத்துவமனையில் அனுமதி

(மன்னார்)

மன்னார் அடம்பன் பொலிஸ்பிரிவுக்குட்பட்ட பள்ளிவாசல் பிட்டி நெடுவரம்பு பகுதியில் சீவல் தொழிலாளி ஒருவர் கொடூரமாக தாக்கப்பட்டுள்ள நிலையில் மேலதிக சிகிச்சைகளுக்காக மன்னார் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். பலத்த காயங்களுடன் மன்னார் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்ட சந்தேக நபரை பார்வையிட்ட நீதிபதி சந்தேக நபரை விளக்கமறியலில் வைக்க உத்தரவிட்டுள்ளதுடன் மேலதிக விசாரணைகளை அடம்பன் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (6-285)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இரு நாட்கள்...

இலங்கை கிராம உத்தியோகத்தர்கள் சங்கத்தின் தலைவர் நந்தன ரணசிங்க அறிவித்துள்ளார்.

எதிர்வரும் திங்கள் மற்றும் செவ்வாய்க்கிழமைகளில் அவர்கள் போராட்டத்தில் ஈடுபடவுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார். (ம-7,10)

## கொத்து...

இவ்வாறு விலை குறைக்கப்படுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் ரோல்ஸ் உள்ளிட்ட சோர்ட் ஈட்ஸ் வகைகளின் விலைகள் 10 ரூபாயினால் குறைக்கப்படுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

பால் தேநீர் மற்றும் தேநீர் விலைகளில் மாற்றம் செய்யப்படவில்லை. (ம-7,10)

## லாஃப்...

கப்பட்டுள்ளது.

இதன் புதிய விலை 3,840 ரூபாய்.

5 கிலோ எடையுள்ள எரிவாயு சிலிண்டரின் விலை 110 ரூபாயால் குறைக்கப்பட்டுள்ளதுடன், அதன் புதிய விலை 1,542 ரூபாயாகும். (ம-7,10)

மஹஜன சம்பத
திகதி 2024.05.03
சீட்டிழுப்பு இலக்கம் 5464
Q 7 0 2 2 6 5
அத சம்பத
Q 2 2 6 5
சீட்டிழுப்பு இலக்கம் 39
National Lotteries Board

தன நிதானய
திகதி - 2024.05.03
சீட்டிழுப்பு இலக்கம் - 1494
D 09 42 57 73 D
Double Chance 60919

மெகா பவர்
திகதி 03/05/2024
சீட்டிழுப்பு இலக்கம் 1812
I 10 15 37 49 75
46382

லக்கி 7 VIP
திகதி 2024.05.03
சீட்டிழுப்பு இலக்கம் 0290
U 0 8 8 7 6 5 U

கொவிசெத
சீட்டிழுப்பு இலக்கம் 3706
சீட்டிழுப்பு திகதி 03.05.2024
Y 10 33 37 60
Y 09402

HANDAHANA
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு திகதி 2024.05.03
சீட்டிழுப்பு இலக்கம் 0773
சிம்மம் 12 20 52 62 சிம்மம்
23033 27

## காதலி வீட்டில்...

தொடர்பில் இருந்ததாகவும், பெண்ணின் வீட்டாருக்கும் மகளின் காதல் தொடர்பு தெரிந்து இருந்தமையால், காதலி வீட்டிற்கு காதலன் சுதந்திரமாக சென்று வருவது தெரியவந்துள்ளது.

இந்நிலையில் காதலியின் வீட்டில் தூக்கில் தொங்கிய நிலையில் காதலன் சடலமாகக் மீட்கப்பட்டுள்ளார்.

தனது மகனின் இறப்பில் சந்தேகம் உள்ளதாக இளைஞனின் தாயார் மரண விசாரணையில் தெரிவித்துள்ளார்.

உடற்கூற்றுப் பரிசோதனைக்காக சடலம் யாழ்.போதனா வைத்திய சாலையில் ஒப்படைக்கப்பட்டுள்ள நிலையில், சுன்னாகம் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (ம-7,10,33)

## மைத்திரியிடம்...

தொடர்பில் வெளியிட்ட சர்ச்சைக்குரிய கருத்துத் தொடர்பிலேயே அவர் நேற்று வாக்குமூலம் வழங்கியுள்ளார்.

நேற்றுக் காலை 10 மணியளவில் குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தில் முன்னிலையான அவர் பிற்பகல் 12.20 மணியளவில் அங்கிருந்து வெளியேறியுள்ளார். (ம-7,10)

## விபரீத...

தன்னைத்தானே சுட்டுத் தற்கொலை செய்து கொண்டுள்ளார்.

இச்சம்பவம் தொடர்பில் முழங்காவில் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ம-7,10,316)

## அரசுக்கு...

கொண்டனர்.

கொழும்பு விஹாரமகாதேவி பூங்காவிற்கு முன்பாக இந்த ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

"சுதந்திர சுகாதாரப் பட்டப்படிப்பினை பணத்திற்காக விற்பனை செய்யும் அரசாங்கத்தின் சூழ்ச்சியை உடனடியாக நிறுத்துமாறு இந்த ஆர்ப்பாட்டத்தின்போது வலியுறுத்தப்பட்டது.

விஹாரமாதேவி பூங்காவிற்கு அருகில் எதிர்ப்பு நடவடிக்கையை முன்னெடுத்தபோது, அதனைத் தடுத்து நிறுத்தும் வகையில் பொலிஸார் அறிவித்தல் விடுத்தனர்.

எனினும், பொலிஸாரின் அறிவிப்பையும் பொருட்படுத்தாது மாணவர்கள் எதிர்ப்பு நடவடிக்கையை முன்னெடுத்ததால் நீர்த்தாரை பிரயோகம் மேற்கொள்ளப்பட்டது.

மாணவ செயற்பாட்டாளர்கள், அங்கிருந்தவர்களுடன் உரையாடியதன் பின்னர் மாணவர்கள் கலைந்து சென்றனர். (ம-7,10)

## இலங்கையில்...

வாறு குறிப்பிட்டுள்ளது.

இலங்கையில் ஊடக சுதந்திர விடயங்கள் 2009ஆம் ஆண்டு வரை அந்த நாட்டில் காணப்பட்ட உள்நாட்டு யுத்தத்துடன் தொடர்புபட்டவையாகக் காணப்படுகின்றன என்று தெரிவித்துள்ள எல்லைகள் அற்ற செய்தியாளர்கள் அமைப்பு, தமிழர் போராட்டம் ஒடுக்கப்பட்டவேளை ஊடகவியலாளர்கள் பலருக்கு எதிராக இடம்பெற்ற இன்னமும் நீதி கிடைக்காத வன்முறைச் சம்பவங்கள் இன்னமும் சுதந்திரத்துக்கும் தொடர்பு உள்ளது என்றும் தெரிவித்துள்ளது.

220 இலட்சம் மக்கள் வசிக்கும் இலங்கையில் ஊடகத்துறை இன்னமும் ஆபத்தில் உள்ளது என்றும் எல்லைகள் அற்ற செய்தியாளர்கள் அமைப்பு தெரிவித்துள்ளது. கடந்த இரண்டு தசாப்தங்களாக ஊடகத் தொழில்துறையினர் கொல்லப்பட்டனர் அல்லது காணாமல் ஆக்கப்பட்டனர் என்று தெரிவித்துள்ள எல்லைகள் அற்ற செய்தியாளர்கள் அமைப்பு, 2015ஆம் ஆண்டின் பின்னர் எந்த ஊடகவியலாளரும் கொல்லப்படவில்லை என்றும், ஆனால் முந்தைய கொலைகளுக்குக் காரணமானவர்கள் இன்னமும் தண்டிக்கப்படவில்லை என்றும் தெரிவித்துள்ளது.

"இலங்கையில் ஊடகவியலாளர்கள் இன்னமும் இராணுவத்தினர் மற்றும் பொலிஸாரால் திட்டமிட்ட முறையில் கண்காணிக்கப்படுகின்றார்கள். அவர்கள் துன்புறுத்தப்படுகின்றார்கள். உள்நாட்டுப் போர் இடம்பெற்ற பகுதிகளுக்குச் செல்வதற்குச் சுயாதீன ஊடகங்களுக்கு அனுமதி மறுக்கப்படுகின்றது." என்று எல்லைகள் அற்ற செய்தியாளர்கள் அமைப்பு மேலும் தெரிவித்துள்ளது. (ம-7,10)

## ஆவர...

அச்சுவேலி பகுதியில் இரண்டு வீடுகள் மீது பெற்றோல் குண்டு மற்றும் கல்வீச்சு தாக்குதல் நடத்திய குற்றத்தில் சகோதரர்கள் இருவர் உட்பட மூவர் கைது செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம-7,10,33)

## நாட்...

இந்த வைரஸ் சுவாசக் குழாயால் ஏற்படுவதனால் இருமல், சளி, காய்ச்சல் மற்றும் உடல் வலி ஆகியவை முக்கிய அறிகுறிகள் என அவர் கூறினார்.

இரண்டு அல்லது மூன்று நாட்களில் வைரஸ் நிலைமை தணிந்தாலும், சில நோயாளிகளுக்கு ஓரிரு மாதங்களுக்கு இருமல் மற்றும் சளி சுவாச நோய்கள் இருப்பதாகவும் வைத்திய அதிகாரி சுட்டிக்காட்டினார்.

இந்த வைரஸும் இன்புளுவென்சா வைரஸ் மாறுபாடு என்ப தால், நோயால் பாதிக்கப்பட்டவர்களிடம் இருந்து முடிந்தவரை விலகி இருப்பதன் மூலமும், குழுவாகவும் கூடும் இடங்களில் முகக் கவசம் அணிவதும் நோய் வராமல் இருக்க அதிக வாய்ப்புகள் உள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

அநுராதபுரத்தில் மாத்திரமன்றி நாடு முழுவதிலும் இந்தக் காய்ச்சல் வேகமாகப் பரவி வரும் நிலையில், சிகிச்சையின்றி குணமாகும் என்று நினைக்காமல் சிகிச்சை பெறுமாறும் கடுமையான சுவாசக் கோளாறுகளை ஏற்படுத்தும் என அவர் சுட்டிக்காட்டியுள்ளார். (ம-7,10)

வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
076 636 3378,
076 097 3127

உத்தியோகபூர்வ முடிவுகள்
03.05.2024 172
O 4 5 4 4 3 8
70959 C
ரூ.21,590,596.00
DLB

SUPER BALL
2438 03.05.2024 வெள்ளி
09 16 18 20 B
48929
ரூ. 86,414,820.00
DLB

சனிதா
2024.05.03 4599
05 19 45 69 K
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.57,681,846.40
69089
DLB

சசிரி
472 2024.05.03 பச்சை
12 24 28
22262
07
ரூ. 2,969,600/-
DLB

ராசி
சீட்டிழுப்பு வாரம் 4150 வர்ணம் கரும் நீலம்
சீட்டிழுப்பு திகதி 2024.05.03 தினம் வெள்ளிக்கிழமை
02 25 27 41
ரூ. 6,936,641.60
694833
DLB

கப்ருக
I 09 01 09 18 33
1614
537332
520,635,528.60
03.05.2024 வெள்ளி
DLB

வெள்ளிக்கிழமை
2264
2024.05.03
ரூ.110,330,351.20
அட கோடிபதி ADA KOTIPATHI
20 28 34 39 Y
189649
DLB

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Happy Supermarket - உரும்பிராய்

| | | |
|---|---|---|
| 1 Kg வெள்ளை சீனி | - 249/= | |
| 1 Kg Prima கோதுமை மா | - 187/= | |
| 1 Kg 7 star கோதுமை மா | - 179/= | |
| 1 Kg றவை | - 286/= | |
| 1 Kg தீட்டல் பச்சை | - 173/= | |
| 1 Kg அரிசி மா | - 200/= | |
| 1 Kg சிவப்பு பருப்பு | - 285/= | |
| 1 Kg மல்லி | - 355/= | |
| 1 Kg சோயா | - 492/= | |
| 1 Kg கட்டி உப்பு | - 80/= | ~~110/=~~ |
| 1 Lux றோஸ் சோப் | - 145/= | ~~175/=~~ |
| 750ml New VSP நல்லெண்ணை | - 1450/= | ~~1550/=~~ |
| 180ml Sunsilk சம்போ | - 440/= | ~~480/=~~ |
| 350g டிகிரி மாரி பிஸ்கட் | - 270/= | ~~330/=~~ |
| 1 Baby Soap | - 115/= | ~~145/=~~ |

400g Anchor

990/=



~~1050/=~~

தரமான பொருட்களை சிறந்த விலையில் கொள்வனவு செய்திடுங்கள்.
மேலதிக விலைக்கழிவு விபரங்களிற்கு எமது Facebook:- happy basket.lk இனை நாடவும்

பலாலி வீதி,
உரும்பிராய் சந்தி.

(646)

Happy Supermarket
0777 8080 30



V2 VISA SERVICES
கனடா
077 77 20 322
077 77 19 322
Visit Visas
Air Tickets
• கனடா PASSPORT APPOINMENTS
விமான பயணச்சீட்டுக்கள்
• Student Visas • Online Appointments
• இந்தியா Visas • Online Visas - All countries
• Police Clearance • Travel Insurance
Sri lankan Visa Extention
வெளிநாட்டவருக்கான இலங்கை விசா நீடிப்பு
(C-0270)


## பணவீக்கம் அதிகரிப்பு

கொழும்பு நுகர்வோர் விலைச்சுட்டெண் மதிப்பீட்டின் பிரகாரம் கடந்த மார்ச் மாதம் 0.9 சதவீதமாகப் பதிவாகியிருந்த பணவீக்கம், ஏப்ரல் மாதம் 1.5 சதவீதமாக சிறு அளவினால் அதிகரித்துள்ளது.

அதன்படி கடந்த மார்ச் மாதத்தில் 3.8 சதவீதமாகப் பதிவான உணவுப்பணவீக்கம் ஏப்ரலில் 2.9 சதவீதமாக வீழ்ச்சியடைந்ததுடன், மார்ச்சில் 0.5 சதவீதம் எனும் குறிப்பிடத்தக்களவிலான சுருக்கத்தைப் பதிவு செய்த உணவல்லாப்பணவீக்கம் ஏப்ரலில் 0.9 சதவீதமாக அதிகரித்தது.

(ம-7.10)


## வேலையாட்கள் தேவை

யாழ் நகரில் இயங்கிவரும் பிரபல லிங்கம் கூல்பார் நிறுவனத்திற்கு வேலையாட்கள் தேவை.
ஆண்/பெண் இருபாலாரும்.

- சிற்றுண்டி பரிமாறுபவர் (Supplier)
- காசாளர் (Cashier)
- சிட்டை எழுதுநர் (Bill Clark)
- துப்பரவு பணியாளர் (Cleaner)

(619)

லிங்கம் கிறீம் ஹவுஸ்
340C, பொன்னம்பலம் வீதி, யாழ்ப்பாணம். 077 711 1410



## வேலையாட்கள் தேவை

யாழ்.கச்சேரிக்கு அண்மையில் இயங்கும் Hotel ஒன்றிற்கு பின்வரும் வேலையாட்கள் தேவை

- Kitchen உதவியாளர்
- Room Cleaners
- சமையலாளர்
- உணவு பரிமாறுபவர்
- பாத்திரம் கழுவும் பணியாளர்

வயது எல்லை 40ற்கு உட்பட்ட இருபாலாரும்.
வேலை இடம் - கச்சேரிக்கு அருகாமை

076 012 0283

இற்கு விபரத்தை தருமாறு தாழ்மையுடன் கேட்டுக்கொள்கின்றோம்

(634)



## காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் சுன்னாகம் மின்சார நிலைய வீதியில் 31 பரப்பு காணி விற்பனைக்குண்டு.

- 15 அடி பாதையுடன் 2 பரப்பாக பிரிக்கப்பட்டுள்ளது.
- குடியிருப்புக்கள் சூழ உள்ள பகுதி
- சுன்னாகம் நகரம் 1 Km
- ஒரு பரப்பின் விலை 15 இலட்சம் தொடக்கம் 20 இலட்சம் வரை உள்ளது.
- தரகர் தேவையில்லை.

(625)

077 88 62 927



## காணி விற்பனைக்கு

நல்லூர் Temple Road துர்க்கா மணி மண்டபத்தின் அருகில் செல்லும் பாதையூடாக அமைந்துள்ள 4 பரப்பு காணியானது விற்பனைக்கு உண்டு.
மேலும் மூத்ததம்பி மடம் அருகிலுள்ள பாதையூடாகவும் செல்லமுடியும்.

077 229 4985
077 621 2039

(631)



## உடனடி வேலை வாய்ப்புக்கள்

EXECUTIVE OFFICER



- சம்பளம் - 25000/= தொடக்கம் 50000/= (நிபந்தனைகளுக்கு உட்பட்டது)
- வயது-22 தொடக்கம் 35
- தகுதி- பட்டதாரிகள் (ஆங்கில அறிவு அவசியமானது)

(C-0270)

V2 TRAVELS

AIRTICKETING, VISA SERVICES, INTERNATIONAL COURIER போன்ற துறைகளில் பயிற்சி அளித்து உடனடி வேலைவாய்ப்புக்கள் வழங்கப்படும்

49A ,சப்பல் லேன் யாழ்ப்பாணம்
0777-068-777



## CANADA VISA

UK யின் பிரபல சட்டத்தரணியின் அனுசரணையுடன் செய்து கொடுக்கப்படும்.


021 222 5686
076 424 7111

(511)

Expo Net Overseas Consultants
345, Kasthuriyar Road, Jaffna.


# மரண அறிவித்தல்

மலர்வு
25 - 12 - 1944



உதிர்வு
01 - 05 - 2024

## திரு.சீனியர் இராசையா

கரணவாய் மேற்கு, கரவெட்டியைப் பிறப்பிடமாகவும் கரணவாய் தெற்கு கரவெட்டியை வசிப்பிடமாகவும் கொண்ட திரு.சீனியர் இராசையா அவர்கள் 01.05.2024 அன்று இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற சீனியர் - சின்னம்மா தம்பதியினரின் அன்பு மகனும் காலஞ்சென்ற காசிப்பிள்ளை - இலட்சுமி தம்பதியினரின் அன்பு மருமகனும் பரமேஸ்வரியின் அன்புக் கணவரும் காலஞ்சென்றவர்களான தம்பிராசா, பூபாலசிங்கம் மற்றும் தங்கமலர் ஆகியோரின் அன்புச் சகோதரரும் காலஞ்சென்றவர்களான இராசம்மா, மாணிக்கம், சின்னாச்சி, வல்லிபுரம், சின்னத்தம்பி, கந்தசாமி மற்றும் சிவராசா, இலட்சுமி ஆகியோரின் மைத்துனரும் டாக்டர் ஜசந்தா (அவுஸ்திரேலியா), அமுதா (அபிவிருத்தி உத்தியோகத்தர்), எழில்வேந்தன்(USA), யசோதா(USA), எழில்ரமணா(அபிவிருத்தி உத்தியோகத்தர்) ஆகியோரின் பாசமிகு தந்தையும் அமரர் சத்தியேந்திரா, திருமாறன்(அபிவிருத்தி உத்தியோகத்தர்), சுபைதா(USA), காந்தீபன்(USA), நிரோஷலா (அபிவிருத்தி உத்தியோகத்தர்) ஆகியோரின் மாமனாரும் மயூரன் (அவுஸ்திரேலியா), காருணியா, கிருத்திகன், ஆருசன், கேசிகா(USA) ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 05.05.2024 ஞாயிற்றுக்கிழமை அன்று காலை 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று தகனக்கிரியைக்காக பூதவுடல் கிராய் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறோம்.


தகவல்:
குடும்பத்தினர்

077 865 8096

(C-0269)

# 1ஆம் ஆண்டு நினைவஞ்சலி

அன்னை மடியில்
1952 . 11 . 01



இறைவன் அடியில்
2023 . 04 . 16

## அமரர் வேலன் செல்வராசா [லிங்கம்]

திதி - ஏகாதசி [2024.05.04]

எம்மைப் பிரிந்து ஓராண்டு கடந்திடினும் நும் பிரிவை எம்மால் கடக்கவே
இயலவில்லை கண் முன்னே வாழ்ந்தகாலம் கனவாகிப் போனாலும்
எங்கள் முன்னே உங்கள் முகம் எந்நாளும் உயிர் வாழும்
மண் விட்டு மறைந்து
நீங்கள் விண்ணோக்கிச் சென்று
ஓராண்டு சென்றாலும்
கண்விட்டு மறையாது
உங்கள் நினைவுகள்
உங்கள் ஆத்மா சாந்தி பெற
பிரார்த்திக்கின்றோம்.

(0040)

துன்னாலை கிழக்கு,
கரவெட்டி.

பிரிவால் துயருறும்:
குடும்பத்தினர்

இப்பத்திரிகை வலம்புரி நியூஸ் பேப்பர் (பிறைவேற்) லிமிட்ரெட் ஸ்தாபனத்தாரால் இல.191, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 04.05.2024 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org